Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யுதுப்பொலீஸுடன் யாழ்ப்பாணத்தில்
FedEx. Express
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும்
விரைவாக பொதிகள், கடிதங்களை
அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்
THIRUMURUGAN COM NET
Opposite Diolag phone
259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
Fax:021 222 7836
E.mail:thirumurugan5@lycosmail.com
பலநோக்கு கூ.ச.முன்பாக
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 7560
Fax:021 222 7310

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 கார்த்திகை 18 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷவ்வால் 20 (03.12.2004) வெள்ளிக்கிழமை இதழ்:64

### போருமில்லாத, சமாதானமும் இல்லாத

# அரசியல் சூனிய நிலைமை அனுமதிக்கவே முடியாது

## நோர்வேயிடம் புலிகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

போரும் இல்லாத, சமாதானமும் இல்லாத அரசியல் சூனிய நிலைமை தொடர்வதை அனுமதிக்க முடியாது. இந்த நிலை களையப்படவேண்டும் என்று நோர்வே அரசாங்கத்திடம் விடுதலைப் புலிகள் தரப்பு வற்புறுத்திக் கூறியிருப்பதாக தெரியவருகிறது.

கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் செய்த நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கரை சமாதானச் செயலகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தியபோது புலிகளின் இந்த நிலைப்பாடு குறித்து விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வலியுறுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)



### மோட்டார் சைக்கிள் படைப்பிரிவை

## திருமலை நகரிலிருந்து பின்வாங்க படைத்தரப்பு இணக்கம் தெரிவிப்பு!



(திருகோணமலை)

திருகோணமலையில் அண்மையில் இடம்பெற்ற வன்செயல்கள் தொடர்பாக ஆராய்ந்துவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இனி இடம்பெறாமல் தடுப்பது தொடர்பாக திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தலைமையிலான குழுவினருக்கும், படையினருக்கும் இடையில் நேற்று திருகோணமலையிலுள்ள மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

நேற்றுப்பகல் 11.30 மணியிலிருந்து சுமார் ஒன்றரை மணித்தியாலங்களாக நடைபெற்ற இந்தச் சந்திப்பில் திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தலைமையில் திருமலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சோதனைச் சாவடிகளை நேற்று படையினர் மூடினர்!

(கொழும்பு)

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்ட தால் - ஓமந்தை மற்றும் உயிலங்குளம் சோதனைச் சாவடிகளைப் படையினர் மூடிவிட்டதாக இராணுவப் பேச்சளர் பிரிகேடியர் தயா ரத்னாயக்க தெரிவித்தார்.

நேற்று இரு மாவட்டங்களிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதால் - சோத னைச் சாவடிகள் - மேற்பார்வை செய்யும் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் அதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற அமர்வில் ஜனாதிபதி பற்கேற்பு!

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் நேற்றைய கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா கலந்து கொண்டார். நேற்றுமாலை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின் போதே ஜனாதி பதி சந்திரிகா பங்குபற்றினார்.

வரவு செலவுத் திட்ட, கல்வி, உயர் கல்வி அமைச்சிற்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதம் நடை பெற்ற போதே ஜனாதிபதி சந்திரிகா இதில் கலந்துகொண்டார்.

பிரதமரின் ஆசனத்தில் அமர்ந்திருந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா மன்னார் மாவட்டங்கள் பூரண ஹர்த்தாலால் ஸ்தம்பிதம்!

(வவுனியா)

வவுனியா, மன்னார் மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களைக் கண்டித்தும், இந்தச் சம்பவங்களின்போது பொதுமக்கள் மீது படையினர் மேற்கொண்ட தாக்குதல்க ளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் வவுனியா, மற்றும் மன்னார் மாவட்டங்களில் பொது அமைப்புக்களினால் நேற்றையதினம் மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தால் காரண மாக இரண்டு மாவட்டங்களினதும் இயல்பு நிலை முற்றாகப் பாதிப்படைந்தன.

தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வுகளைக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பாதாள உலகக் குழுத் தலைவருடன் பொலிஸ் அதிகாரிகளுக்கு தொடர்பு

(கொழும்பு)

மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் படுகொலையுடன் தொடர்பு டைய சந்தேக நபரான பொட்டு நௌபரின் நாட்குறிப்பில் - 19 உயர் பொலிஸ் அதிகாரிகள் 'அவருடன் தொடர்பு வைத்திருந்ததாக குறிப்பிடப்பட்டிருப்பதாக இணையத்தளம் ஒன்று செய்திவெளியிட்டுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

சரத் அம்பேபிட்டியவின் கொலை தொடர்பாக விசாரணைகளை நடத்திவரும் பொலிஸார் பாதாள உலகக் குழுத் தலைவரான

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# யாழ்.மாநகரசபை பகுதி கழிவுகளை அகற்ற முடியாத நிலையில் மாநகரசபை

## காரணங்களை விளக்குகிறார் ஆணையாளர்

யாழ்.மாநகரசபைப் பகுதியில் வீட்டுக்குவீடு குப்பைகள் நிரம்பி வழிகின்றன என்ற முறைப்பாடுகள் சரியானதென்பது யாழ்.மாநகர சபைக்கு நன்கு தெரியும். ஆனால், பின்வரும் காரணங்களால் முக்கியமான குப்பை கூழங்களை உடனுக்குடன் அகற்றமுடியாத நெருக்கடியில் மாநகரசபை சிக்கியுள்ளதெனவும் எனவே யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள கழிவுகளையும் குப்பைகளையும் டிசெம்பர் மாதம் வரை முழுமையாக அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாதுள்ளதென்பதையும் மக்களுக்கு தெரியப்படுத்துவதாக யாழ்.மாநகரசபை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

எனவே மாநகரசபைப் பகுதியில் வசிக்கும் வீட்டு உரிமையாளர்கள் இயன்றளவு தங்கள் வீட்டுக் குப்பைகளை தங்கள் தங்கள் வீட்டு வளவிற்குள்ளேயே புதைக்குமாறும் அல்லது எரியூட்டுமாறு தயவாகக் கேட்டுக்கொள்வதாகவும், அவ்வாறு செய்யமுடியாத பட்சத்தில் வீடுகளுக்கு முன்பாக குப்பைகளை உரப்பையிலிட்டு வைக்குமாறும் அவற்றை வேறு வீட்டிற்கு முன் வைக்க வேண்டாமென்றும் அவர் மக்களைக் கேட்டுள்ளார்.

யாழ்.மாநகரசபை ஆணையாளர் குப்பைகளை உடன் அகற்ற முடியாமைக்காகத் தெரிவித்த காரணங்கள் வருமாறு.

மழைக்காலமாதலால் வழமையான தொகைக் குப்பை கூழங்களிலும் பார்க்க மிகக்கூடுதலான குப்பைகள் குடியிருப்பாளர்களால் கொட்டப்படுகின்றன. வாழைத் தண்டுகள், பச்சைமரங்கள், இலை குழைகள் என்பவற்றைக் குடியிருப்பாளர்கள் எல்லோரும் வீட்டுக்கு முன்பாகப் போடுகிறார்கள். இவற்றை விட தமது இடங்களில் குப்பைகளை இடமுடியாத சில குடியிருப்பாளர்கள். தங்கள் குப்பைகளை மணம் எழுப்பக்கூடிய கழிவுப் பொருட்களுடன் இரவு நேரங்களில் வேறொருவரின் வாசலில் கொட்டுகிறார்கள்.

மாநகர சபையானது தனது ஒரு லட்சம் மக்களின் வீட்டுக் குப்பைகளைக் கொட்டுவதற்காக காக்கைதீவில் 97 பரப்புக்காணியை தனது செலவில் கொள்வனவு செய்துள்ளது. கடந்த 10 வருடங்களாக அந்த இடத்தில் தான் குப்பைகள் கொட்டப்பட்டு வந்தன. ஆனால் மிக அண்மைக்காலத்தில் அக் குப்பைகொட்டுமிடத்துக்கு முன்பாகவுள்ள வயற் காணியில் 25 குடும்பங்களுக்கான குடியேற்றத்திட்டத்தை உருவாக்கிய முன்னாள் அமைச்சர் தி.மகேஸ்வரன் இந்தக் குடியேற்றத்திட்டத்திற்கு வரக்கூடிய எதிர்விளைவை மனதிற் கொள்ளவில்லை. அதனால் அந்தக் குடியேற்றத திட்டத்திலுள்ள மக்கள் மாநகரசபைக்குச் சொந்தமான காக்கைதீவுக் காணியில் மாநகரசபைக் குப்பைகளைக் கொட்டுவதைத் தடைசெய்து மறியற்போராட்டம் நடாத்தி தடுத்துவிட்டார்கள்.

ஆதலால் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தற்காலிகமாக எடுக்கப்பட்ட ஒரு அரச காணியில் யாழ் மாநகரசபையில் இருந்து நீண்ட தூரம் பயணித்து தற்போது குப்பைகளைக் கொட்ட வேண்டியுள்ளது. 20 டிராக்டர் லோட் வரையில் நாளாந்தம் எடுக்கப்படுகின்ற குப்பைகளின் அளவானது தற்போது ஆறு லோட் ஆகக் குறைந்துள்ளது.

இதற்குக் காரணம் நீண்ட தூரப் பயணமாகும். இப்போது தற்காலிகமாகக் குப்பை கொட்டப்படுகின்ற புதிய இடத்திலும் குப்பைகளைக் கொட்ட வேண்டாமென அண்மையிலுள்ள இராணுவத்தினரால் தடுக்கப்பட்டுள்ளது. அதனால் அதற்கப்பாலுள்ள வேறு இடத்திற்கு எடுத்துச்செல்ல நேரிட்டது.

காக்கைதீவுக் குப்பை கொட்டுமிடத்தைத் தடைசெய்த அக்குடியிருப்பு மக்களுடன் அரசாங்க அதிபா ஒன்றரை மாதத்திற்கு முன் ஒரு கலந்துரையாடலினை நடத்தினார். அக் கலந்துரையாடலில் ஆஸ்பத்திரிக் கழிவுகளையும் கொல்களக் கழிவுகளையும் கொட்டுவதில்லை என்று உறுதிசெய்து வேறு சேதனக் கழிவுகளை மட்டுமே அவ்விடத்தில் கொட்டுவதென்றும் இணக்கம் காணப்பட்டது. காக்கைதீவில் அவ்வாறு குப்பை கொட்டுவதாயின் குப்பை கொட்டுமிடத்திற்குத் தெளிவான எல்லையிட்டு வேலியமைக்க வேண்டும் என்றும், அதற்கு ஒரு காவலாளியை பணிக்கமர்த்த வேண்டுமென்றும் அக்குடியேற்ற மக்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் அதற்கும் இணக்கம் காணப்பட்டது.

காவலாளியின் அவசியம் ஏன் ஏற்பட்டுள்ளதெனில், இரவு நேரங்களில் சில சமூகவிரோதிகள் இறந்த விலங்கு, பறவைகளின் எச்சங்களை லான்ட் மாஸ்ரரில் கொண்டு வந்து அவ்விடத்தில் வீசிவிட்டுச் செல்கின்றனர் என்பதனாலாகும்.

அதனால் அக்குடியிருப்புத் திட்டத்திலுள்ள ஒருவரைத் தெரிவு செய்து அவருக்கு மாதாந்த வேதனமாக 3000 ரூபா வழங்கி காவலாளியாக அமர்த்துவதற்கு சபைக்கூட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது. தற்போது இக்குறித்த காக்கைதீவுக் காணிக்கு வேலியிடுகின்ற பணி மேற்கொள்ளப்படுகின்றது.

அரசாங்க அதிபர் கல்லுண்டா வெளியில் 50 ஏக்கர் அரச நிலத்தினை எமது சபைக்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலரின் அனுசரணையுடன் வழங்கியுள்ளார். இந்த நிலத்தினை அடைவதற்கு அக் காணிக்கும் வீதிக்கும் இடையில் அமைந்துள்ள கால்வாய் தடையாக இருப்பதால். தற்போது அக் காணியையும் வீதியையும் இணைத்து மதகு ஒன்றினை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

அத்துடன் புத்தாண்டில் மாநகர சபையானது சிறந்த முறையில் குப்பை கூழங்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது.

அ) கிளிநொச்சி, வன்னி வேளாண் வளப்பிரிவிலிருந்து 10 உழவு இயந்திர இழுவைப் பெட்டிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. அவற்றைவிட தற்போது 07 டிராக்டர் வரையில் குப்பை கூழங்களை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளன. ஜனவரி மாதத்தில் இருந்து இந்த டிராக்டர் பெட்டிகளை இன்று நாம் வீதிக்கு வீதி சேகரித்து பொதுமக்களுக்கும். போக்குவரத்துக்கும் இடையூறாக குவித்து வைத்திருக்கும் இரண்டாம் நிலை நிலையங்களில் அதிகாலை 6.00 மணிக்கு நிறுத்திவைக்கவுள்ளோம். மாநகரசபைத் தொழிலாளா்கள் சென்று அவர்களது கைவண்டில்களில் சேகரித்துவரும் குப்பைகளை எடுத்துச்சென்று நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இந்த டிராக்டர் பெட்டிகளில் நிரப்புவார்கள்.

பொதுமக்களும் தங்களது குப்பைகளை அவ்விடத்திற்கு தாமாகவே எடுத்துச்சென்று அவ் டிராக்டர்பெட்டிகளில் கொட்டலாம். இவ்வாறு 1ஆம் 2ஆம் தர நிலையங்களில் டிராக்டர் பெட்டிகளில் சேகரிக்கும் குப்பைகள் அன்றையதினமே டிராக்டர் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு உரிய இடங்களில் கொட்டப்படும்.

இவற்றோடு நகர சுற்றாடல் திட்டமிடல் முகாமைத்துவப் பிரிவிற்கான கட்டடம் ஒன்று நிறுவப்படுள்ளது. குப்பைகூழங்களைக் கொண்டு உரம் தயாரிக்கும் உரத் தொழிற்சாலை ஒன்றும் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. அவற்றின் மிக முக்கிய பணியாக யாழ்.மாநகர சபையினால் சேகரிக்கப்படும் 45 மெற்றிக்தொன் குப்பைகளை பயனுள்ள முறையில் பயன்படுத்துவதாகும்.

100 பிளாஸ்ரிக் ஆர்பிகோ குப்பை கொட்டிவைக்கும் விசேஷ பரல்களும் 300 குப்பை போடும் சிறிய றம்களும் கொள்வனவு செய்யபபடவுள்ளன. அவை யாழ்நகரக் குடியிருப்பாளர்களுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டு குப்பைகளைத் தமது வீட்டு வாசல்களில் ஒழுங்காக சேகரிக்க வசதி செய்யவுள்ளோம். அவற்றை இரு நாட்களுக்கு ஒரு தடவை அகற்றவும் ஒழுங்கு செய்யவுள்ளோம்.

ஆகவே மாநகரசபைக் குடியிருப்பாளர்கள் கூடியவரை இந்த செயற்படுகளுக்கு ஆதரவு தருமாறும் டிசெம்பர் மாதம் வரையிலான எமது இயலாமையை ஏற்றுக்கொள்ளுமாறும் தயவாக வேண்டுகிறேன்.

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் 9 வரையான வகுப்புகளில் கற்பிக்கும்ஆசிரியர்களுக்கான கணிப்பீட்டிற்கான ஆசிரியர் செயலமர்வு யாழ்.கல்வி வலயத்தில் இன்று ஆரம்பமாகிறது.

எ.பி.சி. பாடசாலைகளில் கணிப்பீட்டு இணைப்பாளராக இருப்பவர்களுக்கு யாழ்.வலயக்கல்வி அலுவலகத்திலும் ஆங்கிலப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும் II, III பாடசாலைகளில் சமூகக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் ஆங்கில பாடமும் தமிழ்ப் பாடமும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் யாழ் இந்துமகளிர் கல்லூரியில் இன்று காலை 8.30 மணிக்கு செயலமர்வு ஆரம்பமாகவுள்ளது.

தரம் 1ஏபி, 1சி பாடசாலையைச் சேர்ந்த சமூகக்கல்வி கற்பிக்கும் ஆசிரியருக்கும் யாழ்.இந்துமகளிர் கல்லூரியில் நாளை செயலமர்வு நடைபெறவுள்ளது என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## வாருங்கள் - அறியுங்கள் - படியுங்கள்

**எந்திரவியல் — டிப்ளோமா — பட்டமானி**

**பட்டப்பின் படிப்பு — படிக்க விரும்பும்**

**மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்**

எதிர்வரும் ஞாயிறு 05.12.2004 காலை 10.00 மணிக்கு இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் யாழ்.பிராந்திய நிலையத்திற்கு, கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்திலிருந்து வருகை தந்திருக்கும் பேராசிரியர்கள் சிரேஷ்ட விரிவுரையாளர்களுடன் கலந்துரையாட அனைத்து பாடசாலை O/L, A/L மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விண்ணப்பப் படிவம் 250/= செலுத்தி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இடம்:- *பிரவுண் றோட், கொக்குவில்.*

*தொழில்நுட்பக் கல்லூரிக்கு அருகாமையில்.*

எந்திரி.ச.ஆ.ஞானேந்திரன்
யாழ்.பிராந்திய இயக்குநர்.

(C/3421)


## சிறு விளம்பரம்

**போட்டோப் பிரதி இயந்திரம் விற்பனைக்கு**

தரமான Conon 1215 போட்டோப் பிரதிகள் இயந்திரம் விற்பனைக்குண்டு. தொடர்பு: வித்தியா தொலைத் தொடர்பகம், சாவகச்சேரி. T.P.: 0777 770247 (997)

**நிறஞ்சனாஸ்** சங்கானை
இன்று முதல் விஜயகாந், சமீதாரெட்டி நடித்த
**இராஜ்ஜியம்** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
**VANHELSING** (றகுல படம்)
(சி-2723)

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம்.
அஜித், சிநேகா நடித்த (குளிரூட்டப்பட்டது)
**ஜனா** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30.2.30. 6.30 (பு.நே)
தினசரி இரவு 9.00 (பு.நே)
**RAMBO - 3** தாக்குதல் நிறைந்த படம்
(சி-3319)

**ராஜா** யாழ்ப்பாணம்.
5ம் திகதி வரை
அஜித், பூஜா நடித்த
**அட்டகாசம்**
காட்சி நேரம்: 10.30.2.30. 6.30 மட்டும்
6ம் திகதி முதல்
**போஸ்** (ரீல்ஸ்)
(சி-3319)

**மனோகரா** சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடான
பி.சி.சௌத்திரியின்
சரத்குமார், நமீதா, வடிவேல்
நடித்த
**சத்ரபதி**

கா.நே. 11.00, 2.00, 7.00,


## ஆறுமுக நாவலர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

ஆறுமுகநாவலர் குருபூசை நாளை நல்லூரில் அமைந்துள்ள துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை மூன்று மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் விசேட சொற்பொழிவையும், ஆறு.திருமுருகன் சிறப்புச் சொற்பொழிவையும் ஆற்றவுள்ளனர்.

✪ ✪ ✪

அகில இலங்கைத் திருமுறை மன்றம் வருடந்தோறும் கார்த்திகை மாத மகநட்சத்திர தினத்தன்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை, வழிபாட்டை யாழ்ப்பாணம் நாவலர் வீதி, நாவலர் கலாசார மண்டபத்தில் நடாத்திவருவது குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் நாளை காலை 9.00 மணிக்கு மேற்படி மண்டபத்தில் மன்றத்தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை, வழி பாடு, சொற்பொழிவு ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் மைய றோட்டறிக் கழகம், கைதடி வளர்மதி சனசமூக நிலையத்துடன் இணைந்து கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தில் இந்த வருடம் க.பொ.த.சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு பரீட்சை வழிகாட்டலை நாளையும், நாளை மறுதினமும் நடத்தவுள்ளது.

எனவே இந்தக் கருத்தரங்கில் இந்த வருடம் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் பங்குபற்றி பயன் பெறுமாறு கருத்தரங்கு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

## நத்தார் இன்னிசை ஆராதனை

(யாழ்ப்பாணம்)

யா/கைதடி செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலையின் வருடாந்த நத்தார் இன்னிசை ஆராதனை நிகழ்ச்சி நாளை காலை 9.30 மணிக்கு அதிபர் த.சாம்சன் லூர்திஸ் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இறையுரை யாழ் அகவொளி நிலைய அதிபர் அருட் கலாநிதி எஸ்.ஜே.இராசநாயகம் அடிகளாரால் வழங்கப்படும். அனைவரும் இதில் கலந்து கொள்ளுமாறு பாடசாலை சமூகத்தினர் அன்புடன் அழைக்கின்றனர்.

## இளம் படைப்பாளிகளுக்கான திறன் வெளிக்கொணர் போட்டிகள்

**யாருக்கு? எங்கே?? எப்போது???**

(விபரங்கள் நாளைய பத்திரிகையின் இப்பகுதியில் இடம்பெறும்)

(C/3420)

## பகிரங்க ஏல விற்பனை

"யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருக்கான வதிவிடத்திலுள்ள (பழைய பூங்கா) பட்ட மலைவேம்பு - 04, முதிரை மரம் - 01 என்பன 2004.12.18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இந்த ஏல விற்பனையில் குறிப்பிட்ட மரத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் அன்றைய தினமே அவற்றுக்குரிய பணத்தைச் செலுத்தி ஒரு வாரத்தினுள் மரங்களைப் பழைய பூங்கா வளாகத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.

மேற்படி மரங்களைப் பார்வையிட விரும்புபவர்கள் யாழ். மாவட்டச் செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தருடன் தொடர்புகொண்டு பார்வையிடலாம்."

செ.பத்மநாதன்,
அரசாங்க அதிபர்,
யாழ் மாவட்டம்.

(C/3419)

# இலங்கையில் தமிழருக்கென்று தனியான பிரதேசம் இல்லை!

## ஹெல உறுமய இனவாதம் எழுப்புகிறது

(கொழும்பு)

இலங்கை வரலாற்றில் தமிழர் பிரதேசம் என்ற ஒன்றே இல்லை என்பது பிரபாகரனுக்குத் தெரியாதா? என ஜாதிக ஹெல உறுமய கேள்வியெழுப்பியுள்ளது.

தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனின் மாவீரர்தின உரை தொடர்பாகத் தமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்து ஹெல உறுமயவினால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -.

தமிழீழ விடுதலைப் புலிகள் கொண்டாடியது மாவீரர்தினமல்ல. அப்பாவித் தமிழ் இளைஞர்களைப் பலிகொடுத்த, கொலை செய்த துக்கதினமாகும்.

தமது இயக்கத்தின் வெற்றிகரமான செயற்பாடுகளைப் பிரபாகரன் தனது உரையில் குறிப்பிட்டார். ஆனால், எமது இராணுவ வீரர்கள் புலிகள் இயக்கத்துக்குச் சளைத்தவர்கள் அல்லர் என்பதை நாங்கள் பிரபாகரனுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த நாட்டில் வரலாற்று ரீதியான தமிழர் பிரதேசங்கள் இல்லை என்பது புலிகளின் தலைவருக்குத் தெரியாதா?

தமது தொழில் செயற்பாடுகளை மேற்கொண்டு நிம்மதியாக வாழ்ந்து வந்த வடக்கு - கிழக்கு மக்களின் இயல்பு வாழ்க்கையைச் சீர்குலைத்து - அப்பாவி இளைஞர், யுவதிகளைத் தமது அமைப்பில் இணைத்து ஆயுதப் பயிற்சியை வழங்கியவரும் பிரபாகரனே என்பது அனைவரும் அறிந்ததே.

இடைக்கால நிர்வாகத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைக்குச் சர்வதேச சமூகம் ஆதரவளித்துள்ளதாம்! ஆனால் நாமறிந்த வகையில் பல உலக நாடுகள் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்துள்ளனவே தவிர ஆதரித்ததாகத் தெரியவில்லை. உண்மையில் தென்னிலங்கை மக்கள் சமாதான செயற்பாடுகளுக்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால் புலிகள் யுத்தம் செய்யும் ஆர்வத்திலேயே செயற்படுகின்றனர்.

வடக்கு - கிழக்கு பிரதேசம் ஊடாக அரசுக்கு எந்த இலாபமும் இல்லை. ஆனால் தென்னிலங்கை மக்களின் வரிப்பணத்தைக்கொண்டு அரசாங்கம் வடக்கு - கிழக்கு மக்களுக்கு உதவிகளைச் செய்துவருகின்றது. எங்களைப் பொறுத்த வரையில் நாட்டில் இனப்பிரச்சினை என்ற ஒன்று இருப்பதாக நாங்கள் உணரவில்லை. புலிகள்தான் வீணாகப் பிரச்சினைகளை உருவாக்கி வருகின்றனர்.

தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களும் புலிகளுக்குச் சார்பாகவே செயற்பட்டு வருகின்றனர். இவர்கள் நாடாளுமன்றத்திலும் வேடிக்கையாகவே செயற்பட்டு வருகின்றனர் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பயிற்சி பெற்றுவரும் பட்டதாரிகளுக்கு ஜனவரியிலேயே அரச நியமனம்!

(கொழும்பு)

பயிற்சி பெற்று வரும் பட்டதாரிகளுக்கு எதிர்வரும் ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து அரசாங்க நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

41 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் திட்டத்திற்கு அமைய மத்திய அரசிலும், மாகாண அரசிலும், நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச நடைமுறைகளுக்கு அமைய, நிலவும் வெற்றிடங்களை பயிற்சி பெறும் பட்டதாரிகளைக் கொண்டு நிரப்புமாறு சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்கு திறைசேரி உத்தரவிட்டுள்ளது.

பட்டதாரிகளிடம் இருந்து ஆக்கபூர்வமான சேவைகளைப் பெறும் வகையில் பொருத்தமான நியமனங்கள் வழங்கப்படும் என நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

## உயர்தர வகுப்புக்களில் ஆங்கில போதனை!

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்புக்களில் ஆங்கில மொழி மூலம் போதனை மேற்கொள்ளும் திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஜனவரிமாதம் முதல் பாடசாலைகளில் ஆங்கிலமொழி மூலம் பாடங்களைப் போதிக்கும் தேசிய கல்வி நிறுவகத்தினதும், பல்கலைக்கழகப் பேராசிரியர்களது உதவி பெறப்பட்டுள்ளது.

உயர்தர வகுப்பில் உயிரியல் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களை ஆங்கிலத்தில் கற்பிப்பதற்காக ஆசிரியர்களுக்குத் தேசிய கல்வி நிறுவகத்தால் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

## யாழ்ப்பாண இளைஞர் பாணந்துறையில் கைது!

(கொழும்பு)

புலிகள் இயக்க உறுப்பினர் எனத் தெரிவித்து, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞரொருவர் நேற்று முன்தினம் கொழும்பு பாணந்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு தெமட்டகொடவில் ஆசிரியத் தொழில் பார்க்கும் யாழ்ப்பாணத் தமிழரை அச்சுறுத்தி, அவருக்குச் சொந்தமான யாழ்ப்பாணத்திலுள்ள இடமொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக இவர் கொழும்புக்கு வந்திருந்ததாகக் கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகளால் வழங்கப்பட்ட அடையாள அட்டை கைது செய்யப்பட்டவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகவும், அந்த அடையாள அட்டையிலுள்ளவர் விடுதலைப் புலிகளின் சீருடை அணிந்து காணபபடுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (தே)

### உயர்பாதுகாப்பு வலயத்தில்

## மீளக்குடியமர்வது குறித்து மீளாய்வுசெய்ய முடியும்!

### யாழ்.படைத்தளபதி சுனில் தென்னக்கோன்

(கொழும்பு)

உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்கள் மீளக்குடியேறுவது தொடர்பாக மீளாய்வு செய்ய முடியுமென, யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அனைவரதும் கடமை. இந்த வகையில் இந்தத் தேசிய பாதுகாப்பை நடைமுறைப்படுத்துவதில் முழுமையாக ஈடுபட்டுள்ள உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பிலும் கவனம் செலுத்துவதாகக் குறிப்பிட்டார்.

அதனடிப்படையில் - மக்கள் மீளக்குடியமரவும், விவசாயம் செய்யவும் நடவடிக்கை எடுத்துவருவதாகவும், இதனைச் சில பகுதிகளில் நடைமுறைப்படுத்தியுள்ளதாகவும் சுனில் தென்னக்கோன் சுட்டிக்காட்டினார்.

ஆயினும், தான் ஒரு பாதுகாப்புக் கட்டளைத் தளபதி என்ற வகையில் உடனடியாக பாதுகாப்பு வலயத்துக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் மக்களை மீளக்குடியமர்த்தி, அவர்களின் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவது தற்போதைய நிலையில் சாத்தியம் இல்லை எனவும், சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக சமூகத்தினருடனான சந்திப்பொன்றில் யாழ். கட்டளைத் தளபதி சுனில் தென்னக்கோன் தெரிவித்தார். (01)

## நாடாளுமன்றத்துக்கு அருகே மூவர் பொலிஸாரால் கைது!

(கொழும்பு)

நாடாளுமன்றத்துக்குக்கு அருகே சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியதாகத் தெரிவித்து - தமிழ்ப் பெண் ஒருவர் உட்பட மூவரை பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட தமிழ்ப்பெண், நாடாளுமன்றத்துக்கு அருகிலுள்ள வீடொன்றில் பணிப்பெண்ணாக பணியாற்றியவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவருடன் கைதுசெய்யப்பட்ட ஏனைய இருவரும் நாடாளுமன்றச் சூழலில் எதற்காக நடமாடினார்கள் என்பதைக் கண்டறிவதற்காக விசாரணைகள் இடம்பெற்றுவருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (01)



பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன நேற்றுமுன்தினம் பாதுகாப்பு அமைச்சில் தனது கடமையை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்பதற்கு முன்னர் மங்கள விளக்கேற்றுகிறார்.

### சமையல் எரிவாயு, பால்மாக்களின்

## விலையை அதிகரிக்குமாறு கோரிய மனுக்கள் நிராகரிப்பு!

(கொழும்பு)

சமையல் எரிவாயு மற்றும் பால்மா ஆகியவற்றின் விலைகளை அதிகரிக்குமாறு, பால்மா மற்றும் சமையல் எரிவாயு உற்பத்தி நிறுவனங்கள் தாக்கல் செய்த மனுவை நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை நிராகரித்தது.

இந்த நிறுவனங்களால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் நியாயமற்றது என தெரிவித்துள்ள நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை, அத்தியாவசியப் பொருட்களின் விலையை அதிகரித்து, நுகர்வோர் மீது சுமையைச் சுமத்த எந்த நிறுவனங்களுக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவித்தது.

## ஆசிரிய நேர்முகப் பரீட்சை திகதிகளில் மாற்றம்!

திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண கல்வி கலாசார அமைச்சில் நடைபெற ஏற்பாடாகியிருந்த க.பொ.த உயர்தரத்தில் தகுதிபெற்ற ஆயிரம் ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற அழைக்கப்பட்டவர்கள், எதிர்வரும் 14 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு ஞாயிறு, புதன்கிழமை தவிர்ந்த நாட்களில் தோற்ற முடியுமென, வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தெரிவித்தார்.

ஏற்கனவே இந்த நேர்முகப் பரீட்சை கடந்த செவ்வாய்க்கிழமை முதல் நடைபெறுமென அறிவிக்கப்பட்டபோதும், திருமலையில் ஏற்பட்ட ஹர்த்தால் மற்றும் வன்செயல்களால் தூர இடங்களிலிருந்து செல்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

இதனையடுத்து இவர்களது இந்தப் பிரச்சினை தொடர்பாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் மகாசிவம் கல்வி அமைச்சின் செயலர் ஆர்.தியாகலிங்கத்திற்குச் சுட்டிக் காட்டியதை அடுத்து இந்த விசேட உத்தரவு விடுக்கப்பட்டிருப்பதாக கல்வி கலாசார அமைச்சின் செயலர் தெரிவித்தார்.

## டுபாயிலிருந்து வந்தவரின் வயிற்றுள் போதை மருந்து

(கொழும்பு)

டுபாயில் இருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த பாகிஸ்தானியர் ஒருவரிடமிருந்து 22 லட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருட்கள் கைப்பற்றப் பட்டன.

விழுங்கிய நிலையில் எடுத்து வரப்பட்ட 92 கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப் பொருள், நீர் கொழும்பு வைத்தியசாலையில் வைத்து வயிற்றோட்ட மருந்து வழங்கப்பட்டு பொலிஸாரால் எடுக்கப்பட்டன.

### தமிழீழ விடுதலைப் புலிகள்

## நாட்டுக்குள் இனவாதத்தைத் தூண்டி பின்னடைவுகளிலிருந்து மீள முயற்சி!

### விமல் வீரவன்ச குற்றச்சாட்டு



தமிழீழ விடுதலைப் புலிகள் நாட்டுக்குள் இனவாதத்தைத் தூண்டுவதன் மூலம் சர்வதேச அரங்கிலும், உள்நாட்டிலும் எதிர்கொள்கின்ற பின்னடைவுகளிலிருந்து மீள முயல்வதாக, ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற கட்டட வளாகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் -

விடுதலைப் புலிகளின் தந்திரங்களில் எவரும் சிக்கிவிடவேண்டாம் என நாங்கள் நாட்டு மக்களுக்குக் கோரிக்கை விடுக்கின்றோம்.

கடந்த சில தினங்களில் வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட நிகழ்வுகளுக்கு தமிழ் மக்கள் பூரண ஆதரவை வழங்கவில்லை. நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி சர்வதேசத்திடம் அனுதாபத்தைப் பெற்றுக்கொள்ள முயல்கிறார்கள்.

நிபந்தனையின்றி அரசாங்கத்தைப் பேச்சுக்கு வரும்படி வலியுறுத்தும் புலிகள், இடைக்கால நிர்வாக யோசனை மூலம் நிபந்தனை விதிக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளே சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் லண்டனில் வெளியிட்ட கருத்துக்களின் பின்னரும்கூட, இடைக்கால நிர்வாக அதிகார சபையின் அடிப்படையில் பேச்சுக்களைத் தொடர வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் கூறுகின்றாரா? என விமல் வீரவன்ச கேள்வியெழுப்பியுள்ளார்.

# தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட்; இந்திய அணிக்கு அபார வெற்றி!







(கொல்கத்தா)

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று இந்திய அணி தொடரைக் கைப்பற்றியது.

நேற்று தென்னாபிரிக்க அணி 5 விக்கெட் இழப்புக்கு 172 ஓட்டங்கள் என்ற நிலையில் ஆட்டத்தை ஆரம்பித்தது. கலிஸ் 52 ஓட்டங்களுடனும், புருன் 9 ஓட்டங்களுடனும் ஆட்டத்தைத் தொடங்கினர்.

அணியின் ஸ்கோர் 183 ஆக இருந்தபோது கலிஸ் ஆட்டமிழந்தார். ஹர்பஜன் சிங்கின் பந்துவீச்சில் அவரிடமே பிடிகொடுத்து வெளியேறினார்.

அவர் 98 பந்துகளில் 4 பவுண்டரியுடன் 55 ஓட்டங்களை எடுத்தார். அடுத்து பொலக் 7 ஆவது விக்கெட்டுக்கு ஜோடியாக புருனுடன் இணைந்தார்.

மேலும் 10 ஓட்டங்கள் சேர்ப்பதற்குள் அந்த அணி 2 விக்கெட்டுக்களை இழந்தது. 62 ஆவது ஓவரில் ஹர்பஜன் - பொலக், ஒன்ரொங் ஆகியோரது விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். அப்போது அணியின் ஸ்கோர் 193 ஆக இருந்தது.

எஞ்சிய 2 விக்கெட்டுக்களையும கும்ளே கைப்பற்றினார். இதனால் தென்னாபிரிக்க அணி 222 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இதனால் இந்திய அணிக்கு 117 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இந்தியத் தரப்பில் ஹர்பஜன் சிங் 7 விக்கெட்டுக்களையும், கும்ளே 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.





117 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிதான இலக்குடன் இந்திய அணி களமிறங்கியது. தொடக்க வீரர்களாக ஷேவாக்கும், கம்பீரும் களமிறங்கினர்.

அணியின் ஸ்கோர் 15 ஆக இருந்தபோது ஷேவாக் ஆட்டமிழந்தார். அவர் என்ரினி பந்தில் ஸ்மித்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். ஷேவாக் தனது பங்குக்கு 10 ஓட்டங்கள் எடுத்தார்.

அடுத்து ராவிட் 2 ஆவது விக்கெட்டுக்கு ஜோடியாக கம்பீருடன் இணைந்தார். மதிய உணவு இடைவேளை வரை இந்திய அணி ஒரு விக்கெட் இழப்பிற்கு 36 ஓட்டங்கள் எடுத்திருந்தது. கம்பீர் 19 ஓட்டங்களுடனும், ராவிட் 9 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

உணவு இடைவேளைக்குப் பிறகு இந்திய அணி தொடர்ந்து ஆடியது. கம்பீர் 26 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ருடோல்ப் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். அப்போது அணியின் ஸ்கோர் 60 ஆக இருந்தது. அடுத்து டெண்டுல்கர், ராவிட்டுடன் ஜோடி சேர்ந்தார்.

இருவரும் சற்று அடித்து ஆடினார்கள். 34 ஆவது ஓவரில் டெண்டுல்கர் ஒரு இமாலய சிக்ஸர் அடித்தார். இதனால் இந்திய அணி 100 ஓட்டங்களைக் கடந்தது.

முடிவில் இந்தியா 40 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 121 ஓட்டங்கள் எடுத்து வெற்றிபெற்றது.

ராவிட் 47 ஓட்டங்களுடனும், டெண்டுல்கர் 32 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஆட்டநாயகன் விருதை ஹர்பஜன்சிங்கும், தொடர் நாயகன் விருதை ஷேவாக்கும் பெற்றனர்.

இந்த டெஸ்ட் வெற்றி மூலம் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரை இந்தியா 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

கான்பூரில் நடைபெற்ற முதல் டெஸ்ட் சமநிலையில் முடிந்தது குறிப்பிடத்தக்கது.

## யாழ்.கல்வி வலய விளையாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய விளையாட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ. இரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வர்த்தக வங்கி முகாமையாளர் ரவீந்திராவும், கௌரவ விருந்தினர்களாக கல்விக் கழகத் துணைப் பொறுப்பாளர் அருண் மாஸ்ரர் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் யாழ்.வலயக் கல்விப் பணிமனை ஊடாக நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் பா.விக்னேஸ்வரன் தெரிவித்தார். (தீ)

## பாகிஸ்தான் வீரர் லத்தீபுக்கு ஆறு மாத காலத் தடை!

(இஸ்லாமாபாத்)

சர்ச்சைக்குரிய பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் லத்தீபுக்கு 6 மாதம் தடை விதிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் போட்டிக்கு கப்டனாக இருந்த லத்தீப் சமீபத்தில் நடந்த ஒரு ஆட்டத்தின்போது பாதியில் போட்டியை நடத்த விடாமல் நிறுத்தினார்.

அவர் வழிநடத்திய கராச்சி புளூஸ் என்ற அணி - 4 விக்கெட் இழப்புக்கு 40 ஓட்டங்கள் பெற்றிருந்த போது ஆடுகளம் சரியில்லை என்று காரணம் கூறி போட்டியை நிறுத்தினார்.

இதுபற்றி விசாரணை நடத்தப்பட்டது. முடிவில் லத்தீபுக்கு 6 மாதம் தடை விதிப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்தது.

இதன் பின்னர் லத்தீப் கூறுகையில் - எனக்கு விதிக்கப்பட்ட இந்த தடையை எதிர்த்து மேன்முறையீடு செய்வேன் என்று தெரிவித்தார்.




## பங்களாதேஷ் செல்லும் இந்திய அணி அறிவிப்பு

(கொல்கத்தா)

கங்கூலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 7 ஆம் திகதி முதல் 22 நாட்கள் பங்களாதேஷில் சுற்றுப்பயணம் செய்து விளையாடவுள்ளது.

இந்தச் சுற்றுப்பயணத்தில் இந்திய அணி அங்கு 2 டெஸ்ட் மற்றும் 3 ஒரு நாள் போட்டி கொண்ட தொடரில் விளையாடவுள்ளது.

இந்த நிலையில் பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பஞ்சாபை சேர்ந்த ககன் தீப்சிங் புதுமுக வீரராக அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணி விவரம் வருமாறு -

கங்கூலி (கப்டன்), ஷேவாக், கவுதம் கம்பீர், டெண்டுல்கர், லக்ஷ்மன், ராவிட், முகமட் கை.்.ப், எஸ். எஸ்.போல், ககன்தீப்சிங், தினேஷ் கார்த்திக், முரளி கார்த்திக், அனில் கும்ளே, ஹர்பஜன் சிங், இர்பான் பதான் மற்றும் சகீர்கான்.

## சிம்பாப்வே கிரிக்கெட் அணி இங்கிலாந்துக்கு செல்கிறது

இங்கிலாந்து கிரிக்கெட் அணி சிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இதைத்தொடர்ந்து சிம்பாப்வே அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 5 டெஸ்ட் மற்றும் 7 ஒரு நாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. இரு அணிகள் இடையேயான முதல் டெஸ்ட் எதிர்வரும் 17 ஆம் திகதி போர்ட் எலிசபெத்தில் தொடங்கும். டெஸ்ட் போட்டி விபரம் வருமாறு -

டிசம்பர் 17 ஆம் திகதி - 21 ஆம் திகதி வரை முதல் டெஸ்ட்.

டிசம்பர் 26 ஆம் திகதி - 30 ஆம் திகதி வரை 2 ஆவது டெஸ்ட்.

ஜனவரி 2 ஆம் திகதி - 6 ஆம திகதி வரை 3 ஆவது டெஸ்ட்.

ஜனவரி 13 ஆம் திகதி - 17 ஆம் திகதிவரை 4ஆவது டெஸ்ட்.

ஜனவரி 21 ஆம் திகதி - 25 ஆம் திகதி வரை 5 ஆவது டெஸ்ட்.

## இரண்டாவது போட்டியிலும் சிம்பாப்வே அணி படுதோல்வி



(ஹராரே)

ஹராரேயில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாவது ஒரு நாள் போட்டியில் இங்கிலாந்து அணி சிம்பாப்வேயை 161 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

சிம்பாப்வே சென்றுள்ள இங்கிலாந்து அணி 4 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் இங்கிலாந்து வெற்றிபெற்றது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் ஹராரேயில் இரண்டாவது போட்டி நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து கப்டன் மைக்கேல் வோகன் துடுப்பாட்டத்தைத் தேர்வுசெய்தார்.

பன்யங்கராவின் பந்துவீச்சில் பெல் 5, வோகன் 11 ஓட்டங்களுடன் வெளியேறினர். இதன் பின்னர் சோலங்கி 42, ஸ்ரரஸ் 33, கொலிங்வூட் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

3 விக்கெட்டுக்கள் விரைவாக சரிய, இங்கிலாந்து அணி 35 ஆவது ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 121 ஓட்டங்கள் எடுத்து தவித்தது.

இந்த நிலையில் கெவின் பீட்டர்சன், ஜெரய்ன்ட் ஜோன்ஸ் இணைந்து அணியை மீட்டனர். ஆறாவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த இவர்கள் 80 பந்துகளில் 120 ஓட்டங்கள் குவித்தனர்.

பீட்டர்சன் 76 பந்துகளில் 77 ஓட்டங்கள் எடுத்தார். இதில் மூன்று சிக்ஸர், 4 பவுண்டரிகள் அடங்கும். ஜோன்ஸ் 46 பந்துகளில் 66 ஓட்டங்களை அள்ளினர். இவர் 6 பவுண்டரி, 2 சிக்சர் விளாசினார். 50 ஓவர் முடிவில் இங்கிலாந்து அணி 6 விக்கெட் இழப்புக்கு 263 ஓட்டங்கள் என்ற வலுவான நிலையை எட்டியது.

சிம்பாப்வே அணியின் சார்பில் சிறப்பாக பந்துவீசிய பன்யங்கரா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

அடுத்து களமிறங்கிய சிம்பாப்வே அணி ஆரம்பத்தில் வோர்ப்பின் பந்து வீச்சில் திணறியது. இவரது பந்துவீச்சில் பிரண்டன் டெய்லர் 13, வெர்மியுலன் 0, மசகட்சா 3 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர்.

மட்சிக்கென்யரி 17 ஓட்டங்களுக்கு அன்டர்சனின் பந்துவீச்சில் வெளியேறினார். கடைநிலை துடுப்பாட்ட வீரர்கள் கொலிங்வூட்டின் பந்துவீச்சில் தமது விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தனர்.

தனிநபராக போராடிய இளம் கப்டன் தைபு அதிகபட்சமாக 32 ஓட்டங்கள் எடுத்தார். இவர் ஜைல்ஸ் சுழலில் அவுட்டானார். இறுதியில் சிம்பாப்வே அணி 36 ஓவர்களில் 102 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்தது.



இங்கிலாந்து அணியின் சார்பில் அபாரமாகப் பந்துவீசிய வோர்ப் 4 விக்கெட்டுக்களையும், கொலிங்வூட் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இத்தொடரின் மூன்றாவது போட்டி புலவாயோ நகரில் நாளை நடைபெறும்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### சாவகச்சேரி நகரசபைக்கு நிதி ஒதுக்கீடு

யாழ். அரச செயலகத்தால் 2004 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டின்மூலம், சாவகச்சேரி நகர சபைக்கு கலாசார மண்டபம் அமைப்பதற்கு 6 மில்லியன் ரூபாவும், பிரதான வீதிகளை புனரமைப்பதற்கு 2 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேசசபைக்கு பிரதான வீதிகளை திருத்துவதற்கும், புனரமைப்பதற்குமாக 3 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (29)

### உத்தியோகத்தர்கள் இடமாற்றம்

பொது நிர்வாக அமைச்சால், 2005 ஆம் ஆண்டு 3 ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் வி.பாலகுமார் சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்கும், க.ரவிச்சந்திரன் கோப்பாய் பிரதேச செயலகத்துக்கும் இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ளார். (25)

### சனசமூக நிலையம் திறந்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

மறவன்புலவு மேற்கில் ஜப்பானின் கிறிதாஸ் நிறுவனத்தால், புதிதாக அமைக்கப் பட்ட சனசமூக நிலையம் அண் மையில் திறந்து வைக்கப்பட்டது.

இதில் தற்போது பாலர் பாடசாலையும் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (29)

# வரணி - இடைக்குறிச்சி மக்கள் செயலகம் முன் மறியற்போராட்டம்

வரணி - இடைக்குறிச்சி கிராம மக்கள் தமக்கு மீளக்குடியமர்ந்த வர்களுக்கான 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படாததைக் கண்டித்து, செயலக வாயிலை மறித்து நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வரணி இடைக்குறிச்சியில் மீளக்குடியமர்ந்து இரண்டு வருடங்களைக் கடந்த நிலையிலும், தமக்கு மீளக் குடியமர்வோருக்கான கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்றும், இதனால் 296 குடும்பங்கள் பாதிக் கப்பட்டுள்ளதாகவும், தமக்கு மிக விரைவில் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படவேண்டும் என செயலகத்தின் முன் சுமார் 60 இற்கு மேற்பட்ட மக்கள் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் ஊழியர்கள் சிறிது நேரம் செயலகத்தினுள் செல்லமுடியாத நிலை ஏற்பட்டது.

இந்த மக்களுடன் நிகொட் நிறுவன அதிகாரிகள் பேச்சுக்களை நடத்தி, எதிர்வரும் 10 ஆம் திகதிக்குள் மீளக்குடியமர்வுக் கொடுப் பனவுகளை வழங்க தாம் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தனர்.

இதனையடுத்தே, மறியற்போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டுக் கலைந்து சென்றனர்.

இதன் பின்னர் செயலக நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பின. இந்தப் போராட்டம் சுமார் இரண்டு மணிநேரம் நடைபெற்றது.

### வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோர் விபரம் சேகரிப்பு

தென்மராட்சிப் பகுதியில் அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக, வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப விபரம் மற்றும் பயிரழிவு விபரங்கள் போன்றவற்றை, சமூகசேவைத் திணைக்களம் தென்மராட்சி பிரதேச செயலகம் ஊடாக திரட்டி வருகிறது. (29)

### முன்பள்ளி கற்கைநெறி மாணவர்களுக்கு கூட்டம்

யாழ். திறந்த பல்கலைக்கழகத்தில் முன்பள்ளி கல்வி கற்கைநெறி பயிலும் மாணவர்கள் அனைவரையும் நாளை காலை 10 மணிக்கு தவறாது சமூகமளிக்குமாறு யாழ். பிராந்திய நிலைய இயக்குநர் ச.ஆ.ஞானேந்திரா கேட்டுள்ளார்.

# வடக்கு கிழக்கு சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை

(சுதுமலை)

மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு, மாகாண உள்ளூராட்சி ஆணையாளருடன் இணைந்து வடக்கு-கிழக்கு மாகாணப் பகுதியில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒரு கட்டமாக உள்நாட்டு சுற்றுலாத்துறையை எவ்வாறு அபிவிருத்தி செய்ய வேண்டும் எனும் தலைப்பில் டிசம்பர் மாதம் செயலமர்வொன்று இடம்பெறவுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள 72 உள்ளூராட்சி சபைகளின் ஊடாக சுற்றுலா விடுதிகள், ஓய்வு அறைகள், நீர் வீழ்ச்சிகள், இயற்கை வனங்கள், அழகிய கடற்கரை பகுதிகள், நீர் நிலைகள், பூங்காக்கள், பறவைகள் சரணாலயங்கள், வெந்நீர் ஊற்றுக்கள் என்பன இனம் காணப்பட்டு, அவற்றின் தகவல்கள் பேணப்படுவதே சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கையென சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர். (91)

## சின்னஞ்சிறு செய்திகள்

### தையல் போதனாசிரியர்களுக்கான கூட்டம்

யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தையல் போதனாசிரியர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 10 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மாதாந்த அறிக்கைகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றையும், தங்கள் பிரிவு தையல் நிலையம், கிராம அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான விபரங்களையும் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலக அதிகாரி தெரிவித்தார். (25)

### பனம் விதைகள் நடுகை

சுற்றாடல் , இயற்கை வளங்கள் அமைச்சின் வனவள முகாமைத்துவத் திட்டத்தின் கீழ், யாழ். மாவட்டத்துக்கு - யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுதலின் பேரில் 23 ஆயிரத்து 400 பனம் விதைகள் வழங்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலக பிரிவுக்கும் தலா 1560 பனம் விதைகள் வழங்கப்படவுள்ளன.

இந்தச் செயற்பாடு பனை அபிவிருத்தி சபை ஊடாக மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ். மாவட்ட திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் வி.சாம்பசிவம் தெரிவித்தார். (25)

# நாவற்குழி வீட்டுத்திட்டம் கையளிப்புக் கூட்டம்

(நாவற்குழி)

நாவற்குழி கிழக்கு பிணை முருங்கையடிப் பகுதியில் அமைந்துள்ள வீட்டுத் திட்ட வீடுகளை வழங்குவதற்கான காணிக் கச்சேரி எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பிணை முருங்கையடி வீட்டுத் திட்டங்களை கையளிப்பதற்கான காணிக் கச்சேரி - நாவற்குழி கிழக்கு கிராம அலுவலரின் காரியாலயத்தில் காலை 10 மணிக்கு பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீனிவாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் காணிக் கச்சேரியில் மேற்குறிப்பிட்ட அரச காணிகளின் உரிமையை மாற்றி, பொது மக்களுக்கு கொடுத்தல் தொடர்பாக ஆராயப்படவுள்ளதாக, தென்மராட்சிப் பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் எஸ்.சிவசுப்பிரமணியம் தெரிவித்தார். (25)

# உள்ளூராட்சி வாரம் கொண்டாடிய பிரதேச சபைகளுக்கு நிதி அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

2004 ஆம் ஆண்டுக்குரிய உள்ளூராட்சிவார நிகழ்வைக் கொண்டாடிய நகரசபை மற்றும் பிரதேச சபைகளுக்கு ஆளுநரால் நிதி வழங்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபைக்கு 25 ஆயிரம் ரூபாவும், பருத்தித்துறை நகரசபைக்கு 40 ஆயிரம் ரூபாவும், வல்வெட்டித்துறை நகரசபைக்கு 10 ஆயிரம் ரூபாவும், சாவகச்சேரி, நெடுந்தீவு, ஊர்காவற்துறை, நல்லூர், வடமராட்சி தெற்கு - மேற்கு, வலி.கிழக்கு, வலி.மேற்கு, வலி. வடக்கு, வலி.தெற்கு, வலி.தென் மேற்கு, வேலணை, பருத்தித்துறை ஆகிய பிரதேசசபைகளுக்கு தலா 30 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டன

(29)




யாழ்.சமூக மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் - அகதிகள் புனர் வாழ்வு நிறுவனத்தினால் தெல்லிப்பளை சோலைப்புலம் நலன்புரி நிலையத்தில் நடத்தப்பட்ட எயிட்ஸ் விழிப்புணர்வுப் பிரசாரத்தில் TRRO வைச் சித்திரா உரையாற்றுவதைக் காணலாம். (100)

# திருவாசக விழாவை முன்னிட்டு மாணவரிடையே போட்டிகள்

(வடமராட்சி)

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டுப் பேரவை திருவாசக விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே பண்ணிசைப் போட்டியை நடாத்தவுள்ளது.

இதில் பங்கு பற்ற விரும்பும் மாணவர்கள் தாங்கள் கல்வி கற்கும் தரம் (2004 இல்) பாடசாலை, பிறந்த திகதி என்பவற்றைப் பாடசாலை அதிபர் அல்லது பெற்றோர் மூலம் உறுதிப்படுத்தி, எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தபால் மூலமோ அல்லது நேரிலோ கையளிக்குமாறு அறிவிக்கபபட்டுள்ளது.

நடுவர்கள் கேட்கும் பாடலை மட்டும் மோகனராகத்தில் பாடிக் காட்டுதல் வேண்டும். இத்துடன் பண்ணிசைப் போட்டியில் பங்கு பற்றும் ஒவ்வொரு பிரிவு மாணவர்களுக்கும் சமய பாடம் தொடர்பான பொது அறிவு எழுத்து மூலப் பரீட்சை நடத்தப்படும்.

பண்ணிசை, சமய அறிவு இரண்டும் பரீட்சிக்கப்பட்டே முடிவுகள் வெளியிடப்படும். இதில் பண்ணிசைக்கு கூடிய காத்திரம் வழங்கப் படும்.

போட்டிகள் 19-12-2004 ஞாயிற்றுக்கிழமை ஆச்சிரமத்தில் நடாத் தப்படும்.

பங்கு பற்ற விரும்பும் பாடசாலை மாணவர்கள் தமது விண்ணப்பங் களை

திருவாசகப் போட்டிக் குழு',
சந்நிதியான் ஆச்சிரம சைவ
கலைபண்பாட்டுப் பேரவை,
செல்வச்சந்நிதி,
தொண்டமானாறு.

எனும் முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு, 24-12-2004 வெள்ளிக்கிழமை அன்று நடைபெறும் திருவாசக விழாவில் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படுமென சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை அறிவித்துள்ளது. (14)

# வலி.மேற்கில் சட்டவிரோத மின் பாவனை அதிகரிப்பு

(சங்கானை)

சங்கரத்தை, வட்டுக்கோட்டை, மாவடி, செம்பாட்டான் தோட்டப் பகுதிகளில் சட்டவிரோத மின் பாவனை அதிகரித்துள்ளது.

இரும்புப் பட்டறை வைத்திருப்போர், தொலைக்காட்சி பார்ப்போர் மற்றும் மின்சார வசதி இல்லாத வீட்டு உரிமையாளர்களே இப்படியாக மின்சாரத்தை சட்ட விரேதமாகப் பெறுகின்றனர்.

இதைப் பற்றி மின்சாரசபையினர் பலமுறை அவர்களை எச்சரித்துள்ளனர்.

ஆனால் தொடர்ந்தும் இவர்கள் இந்தக் காரியத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இதனால் மின்சார பாவனையாளர்கள் - மின் தடை ஏற்படுவதால், பல சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். (48)

# திறந்த பல்கலை பரீட்சை நேர அட்டவணை அறிவிப்பு

யாழ். திறந்த பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ள பரீட்சைகள் பற்றியும், சில கற்கைநெறிகளுக்கான அறிவுறுத்தல்களையும், யாழ். பிராந்திய நிலைய இயக்குநர் எந்திரி ச.ஆ.ஞானேந்திரன் விடுத்துள்ளார்.

சமூக விஞ்ஞானத்துக்கான ஆங்கில மீட்டல் பரீட்சை எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்வியங்காடு - செங்குந்தா இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

வழமையாக இந்தப் பரீட்சை திறந்த பல்கலைக்ககழகத்திலேயே நடைபெற்று வந்தது. இந்தமுறை எந்திரவியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான அறிமுக கருத்தரங்கு கொழும்பிலிருந்து வருகைதரும் சிரேஸ்ட விரிவுரையாளர்களால், அனறையதினம் யாழ். திறந்த பல்கலைக்கழகத்தில் நடாத்தப்பட இருப்பதால், இந்த இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

சமூக விஞ்ஞான கற்கைநெறி கற்கும் மாணவர்களுக்கான பொருளியல் பாடத்துக்கான மதிப்பீட்டு பரீட்சை II இன்று பிற்பகல் 1 மணிக்கு விரிவுரையாளர் ரமேஸால் நடத்தப்படும். சமூகவியல் பாடத்துக்கான பரீட்சை நாளை காலை 10 மணிக்கு இடம்பெறும். (த)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : சு.சுஜீவனா
முகவரி : யாழ்ப்பாணம்.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ----------------
முகவரி ----------------
பிறந்த ஆண்டு: ----------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------------
பெற்றோர் ஒப்பம்



## சிநேகிதியே

# இல்வாழ்க்கை நல்வாழ்க்கையாக மாற

கணவன் - மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படுவதற்கு ஒரு முக்கிய காரணம் மனைவியின் மாமனார், மாமியாரைப் பற்றிக்

கணவனும் அவரது வீட்டாரும் சொல்லும் சுடுசொற்களே. பிறந்தவீட்டை விட்டு வந்தாலும், அவர்களையே நினைத்து வாழ்பவள் பெண். ஆண்கள் பெற்றோர்களுடன் இருந்தாலும், பெண்களுக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையைச் சிலசமயம் கொடுப்பதில்லை என்ற அபிப்பிராயம் பரவலாகக் காணப்படுகிறது.

மாமியார், மச்சாள் கொடுமையைக் கூடக் கணவனின் அன்பில் மறப்பதற்கே மனைவி முனைகிறாள். ஆனால், கணவனும் தன்னை நியாயமின்றிச் சாடும்போது அவள் மன வேதனை பன்மடங்காகிறது. அதிலும் கணவன் தன் வீட்டாரைத் தரக் குறைவாகப் பேசும்போது, அவள் பொறுத்துக் கொள்வதில்லை.

பெண்ணானவள் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தாலும், அந்த ஏழ்மையை ஒரு குறையாகக் கணவனோ, அவள் வீட்டாரே சுட்டிக் காட்டினால், அவளுக்கு அது பிடிப்பதில்லை. மாறாகத் தன் பெற்றோர் உண்மையில் கடமையில் தவறும்போதுகூட தன் கணவன் அதைப் பெரிதுபடுத்தாமலிருந்தால், மனைவிக்குக் கணவன் மேல் ஒரு மரியாதை கலந்த பக்தியே ஏற்பட்டு விடும்.

ஆகவே மனைவியானவள் தனது வீட்டில் ஒன்றாக இணைந்து, சுக துக்கங்களில் பங்கேற்க விரும்பும்வரை கணவன் காத்திருக்க வேண்டும். இப்படிப் பரஸ்பரமாகப் புரிந்து கொள்ளும் தன்மை சிலரிடம் இல்லாமல் இருப்பதே குடும்பத்தில் பலவித பிரச்சினைகளுக்கும் காரணமாக அமைந்து விடுகிறது. அதே சமயம் பெண்ணைப் பெற்றவர்களும் தன் மகளின் மகிழ்ச்சியான வாழ்வைச் சற்று விலகியிருந்தே ரசிக்கக் கற்றுக் கொள்ளவேண்டும்.

அதைவிடுத்து மகள் புகுந்த வீட்டில் நடக்கும் ஒவ்வொன்றையும் தெரிந்து கொள்ளவேண்டும். அதிலும் அந்த வீட்டில் நடக்கும் தவறுகளை அறிந்து, அதை மையமாக வைத்து விவாதம் செய்வது என்பது மகளின் அமைதியைக் கெடுக்கும். சிறுசிறு பிரச்சினைகளில் தலையிடாமல் மகளே சமாளிக்க முடியும், சமாளிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் செயற்படுவது நல்லது. அதேபோல் சிறு பிரச்சினைகளைக்கூட பூதாகரமாக்கி மகள் தன்னிடம் புலம்பும்போது, அவள் மனதில் நீறுபூத்த நெருப்பாக இருக்கும் விடயத்தை ஊதிப் பெருந்தீயாக ஆக்கக்கூடாது.

தன் மகளின்மேல் தவறு இருந்தால் அதைச் சுட்டிக்காட்டி நல்வழிப்படுத்த வேண்டும். தன் வீட்டின் பண ஆதிக்கம், செல்வாக்குப் போன்றவற்றை மகளின் மூலம் மருமகனின் வீட்டில் செலுத்துவது ஆபத்தாகும்.

காதல் திருமணம் புரிபவர்கள் - அதிலும் கணவன் வசதி குறைவானவனாக இருக்கும்போது, அதைப் பயன்படுத்தி அவனைத் தங்கள் வழிக்கு இழுக்கவோ அல்லது அதைக் காரணம் காட்டி மகளை மருமகனிடமிருந்து பிரிக்க முயல்வதோ விவேகமற்ற செயலாகும்.

திருமணம் என்று ஆன பின்பு, அந்த அமைப்பு உறுதியாகச் செயற்பட எப்படி அனைவரும் ஒத்துழைக்கலாம் என்று எண்ணவேண்டும்.

பிறந்தவீட்டில் கணவனைத் தூஷிக்கும்போது மனைவி - வாளாவிருந்தாலோ, துணைக்குச் சென்றாலோ அவளது மரியாதை நாளடைவில் குறையும்.

அதேசமயம் தனது அடிப்படை ஆசைகளுக்கும், விருப்பங்களுக்கும் தடை விதித்தாலோ பெண் என்ற ரீதியில் அடக்கப்பட்டாலோ பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக வெகுண்டெழ வேண்டும்.

பிறந்த வீட்டிலி ருந்த சில சுதந்திரம் -புகுந்த வீட்டில் கிடைக்காமல் போகலாம். அல்லது குறைவாகக் கிடைக்கலாம். அதற்கு வருந்தாமல் தன்னுடைய விருப்பு, வெறுப்புக்களைச் சிறிது சிறிதாக மாற்றியமைக்கப் பழகிக் கொள்ளவேண்டும்.



மாமியார் மற்றும் மச்சாள் (அதுவும் திருமணம் புரியாதிருப்பவர்) வீட்டுக்கு வரும் மணப்பெண்ணிடம் இனிமையான இல்லறத்துக்கு தடையாக ஒருபோதும் இருக்கக்கூடாது.

மகனும், மருமகளும் வெளியே சுற்றுலாவுக்குச் செல்லும்போதுகூட, நானும் வருவேன் என்று கிளம்பும் மாமியார்களைப் பலரும் அறிவார்கள்.

வாழ்வில் எல்லோருக்கும் விரும்பியபடி எல்லா வசதிகளும் அமைவதில்லை. அமையும் வாய்ப்புக்கேற்றவாறு தன்னை மாற்றிக்கொண்டு, ஒத்துப்போக ஒவ்வொரு பெண்ணும் திருமணத்துக்கு முன்பே தன்னைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும்.

கணவனும், தன் பெற்றோர் மற்றும் சகோதர சகோதரிகளுக்கும், மனைவிக்கும் இடையே உறவு நன்றாக அமைய ஒரு பாலமாகச் செயற்படவேண்டும்.

இன்னல்கள் இருந்தாலும், அதை மன உறுதியோடு ஏற்றுச் செயற்பட்டால், இல்வாழ்க்கை நல் வாழ்க்கையாக மாறும் என்பதில் சந்தேகமில்லை.

# அமைதியுறும் நிலை அன்புள்ளவரிடம் மட்டுமே

அன்பு என்பது இருவருக்கிடையே தோன்றுகிற அன்பு மலர் ஆகும். இந்த அன்பு - இருவரின் வேரில் மட்டும் பூப்பூக்கும், காய்காய்க்கும் - அன்பு எல்லோரிடமும் இருக்கிறது. ஆனால், அவர்கள் இருக்கின்ற சூழல், சூழலின் நிலை, வாழ்க்கைமுறை, தொழில் செய்யும் இடம் - இவற்றுக்குள் மட்டும் மாறுபடுகிறது.

எங்களைவிட பணத்திலும், படிப்பில் உயர்ந்தவர்கள் என்று நாங்கள் அவர்களை - அவர்கள் எங்களையும் நினைப்பதனால் இடை வெளி கூடுகிறது. இதனால் உறவு அற்ற நிலையில் தோன்றுகிறது. இந்த வழிமுறைகளுக்குப் பொறுப்பானவர்கள் இருவரும் அல்ல. ஒருவரின் மனதில் தோன்றும் சந்தேகம் தான் இதற்கு முழுக்காரணமாகும். என்னைவிடப் பணத்தில் குறைந்தவன், என்னைவிடப் படிப்பில் குறைந்தவன் என்றும் அந்தஸ்தில் உள்ளவன் நினைப்பதைவிட அன்பு இருக்கப் போவதில்லை.

கலங்கல் ஏற்படுத்தி, மீண்டும் அமைதி பெறும் குளத்தின் வடிவம்போல் மனித வாழ்க்கையில் என்ன நடந்தாலும், ஏது நடந்தாலும் அமைதியுறும் நிலை அன்புள்ளவர்களிடம் மட் டும் உள்ளது. திருமணத்தில் அன்பு, காதலில் அன்பு, நட்பில் அன்பு, பெற்றோர் பிள்ளைகளிடையே அன்பு இப்படியாக அன்பு ஒரே மாதிரித்தான் இருக்கிறது. வித்தியாசப்படுத்தும் போதும் அங்கேமாறுபடுவதற்கு இந்தச் சந்தர்ப்பத்தை நாங்கள் தான் ஏற்படுத்திக் கொடுக்கிறோம்.

பொதுவான வாழ்வியலில் அமைதியும், வாழ்க்கையில் படபடப்பும், அவசரம், நிதான மின்மை போன்ற விடயங்கள் அன் புக்கும் இடம் கொடுக்கும்போது மாறுபடு கிறது. சரியாக நிலைபெறும் போது அன்பு மட்டும் மகத்தாகத் தோன்றுகிறது.

அளவான வீடு, அறிவான குடும்பம், அழகான பூந்தோட்டம், ஆதரவாக உறவினர், உதவியாக அயலவர் கிடைக்கும் மட்டும் வாழ்வில் ஒவ்வொரு நிமிடமும் நல்லதாகக் கழிந்து, பயனுள்ளதாக இருக்கும். பிறருக்காக எங்களையும் ஈடுபடுத்தும்போது அன்பு



நிலைத் திருக்கிறது. பிரயாணத்தின் போது கூட்டம் அதிகமாகவும் இருக்கலாம், சிலநேரம் குறைவாகவும் இருக்கலாம். நிற்க முடியாத ஒருவருக்கு பிரயாணத்தை மேற்கொள்ள முடியாதவரை அவருக்குத் தனது இருப்பிடத்தைக் கொடுக்கும்போது இங்கு அன்பு நிலைத்திருக்கிறது.

என்ன நிலையில் இருக்கிறார்கள், எப்படி இருக்கிறார்கள் என்று பார்க்காமல் அவர்களிடம் என்ன குறை இருக்கிறது என்று கண்டுபிடித்து அதற்கு ஏற்றாற் போல் அதனை நிவர்த்தி செய்யும்போது அன்பு பலம் பெறுகிறது.

# பிஞ்சு முகத்தின் தேடல்

வீமன் ஓயாமல் குரைத்துக் கொண்டிருந்தான். எனக்கு இப்ப எழும்பிப் போக ஏலாது. பள்ளிக்கூட வேலை செய்து கொண்டிருந்தேன். எங்கடை பள்ளிக் கூடத்திலை பொருட்காட்சி நடக்கப் போகிறது. எங்கடை வகுப்பு ரீச்சர் கொஞ்சம் பொல்லாதவ. சொன்ன வேலையைச் செய்து கொண்டு போகாவிட்டால் அவவுக்குக் கோபம் வரும். உடனே தண்டனை விளம்பரம் நடக்கும். அவ குடுக்கிற தண்டனை கொஞ்சம் வித்தியாசமானது. ஏதாவது தவறு செய்தால், பள்ளிக் கூடம் முடிந்த பின்பு தனியாக வகுப்பறையைக் கூட்டித் துப்பரவு செய்ய வேண்டும். ரீச்சர் கூட நிற்பா. இது தான் நடைமுறை எண்டு ரீச்சர் சொல்லிப் போட்டா. ஆனால் அதிலை விதிவிலக்காக ஒரு திருத்தம் சொன்னா. தவறு செய்தவர் வகுப்பைக் கூட்டும்போது விருப்பமானவர்கள் நின்று உதவிசெய்யலாம்.

அன்றைக்கு ஒரு நாள் எங்கடை வகுப்பிலை உள்ள மணிவண்ணன் வீட்டுப் பாடம் செய்து கொண்டு வரவில்லை. பாவம் அவன் மறந்து விட்டான்! தான் மறந்து விட்டேன் என்று சொன்னபோதும் ரீச்சர் விடவில்லை. பள்ளிக்கூடம் முடிய வகுப்பைக் கூட்டவேணும் என்று தீர்மானமாகச் சொல்லிப் போட்டுப் படிப்பிக்கத் தொடங்கி விட்டா.

நாங்கள் எல்லோரும் ஏககாலத்தில் மணிவண்ணன் முகத்தைப் பார்த்தோம். முகம் இருண்டு கிடந்தது. பாடம் முடிந்தது. எல்லோரும் புத்தகப் பைகளைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு எழுந்து நின்றோம். மணிவண்ணன் மட்டும் சும்மா எழுந்து நின்றான். பாடசாலைக் கீதம் பாடப்பட்டது. எல்லோரும் மௌனமாகப் பாடல் முடியும்வரை சீராக நின்றோம். கீதம் முடிய மணி ஒலித்தது. எல்லோரும் வகுப்பறையை விட்டு மெல்ல வரிசையாக வெளியேற வேண்டும். ஆனால் ஒருவரும் வெளியேறவில்லை. மணிவண்ணன் மெல்ல நடந்து போய் தும்புத்தடியை எடுத்துக் கூட்டத் தொடங்கினான். ரீச்சர் ஒன்றும் பேசாமல் தன்னுடைய கதிரையை மேசை மேல் எடுத்து கவிழ்த்து வைக்க, நாங்கள் எல்லோரும் எங்களுடைய கதிரைகளை எடுத்து எங்கள் மேசைமேல் மளமள வென்று கவிழ்த்து விட்டோம். கரும் பலகையை இரண்டு மாணவர்கள் சுத்தம் செய்தார்கள். இன்னும் இருவர் மூலையில் இருந்த குடிதண்ணீரப் பானையைச் சுத்தம் செய்தார்கள். நான் வாசலில் போடப்படும் சாக்கை எடுத்து உதறிப் போட்டேன்.

மணிவண்ணனிடம் தும்புத்தடியை வாங்கி அபராமி மளமளவென்று கூட்டி முடிக்க, அவன் குப்பையைக் கிள்ளிக் கூடையில் போடடான். செங்கதிர் அதை வாங்கிக் கொண்டு ஓடிப்போய்க் கொட்டிவிட்டு வந்தான். எல்லோரும் கதிரைகளைப் பழைய படி அடுக்கி வைத்துவிட்டு, ரீச்சரைப் பார்த்தோம். அவவின் முகத்தில் பெருமை குடி கொண்டிருந்தது. எல்லோரும் வகுப்பை விட்டு சிட்டுக் குருவிகள் போல வெளியே வந்தோம். நான் மணிவண்ணன் கையைப்



பற்றிக் குலுக்கினேன். வீமன் குரைப்புத் தொடர்ந்து... என்னருகே கேட்டது. என் சிந்தனைக் கயிறு அறுந்தது.

யாரோ புதிதாக வந்திருக்கிறார்கள் போலிருக்கிறது! நான் வாசலைப் பார்த்தேன். அதற்கிடையில் வீமனுக்கு அவசரம். குரைத்துக் கொண்டே ஓடி வந்து, என் கொப்பியின் மேல் காலைப் பதிக்க என் கொப்பி எகிறிக்குதிக்க... ஐயோ! என்ரை வீட்டுப் பாடவேலை...! என்று நான் அலற, பின்னே ஏதோ வேலையாக நின்ற அம்மா ஓடி வந்தா! நான் வீமனை விரட்டினேன். அவன் போவதாக இல்லை. அம்மாவைக் கண்டதும் இன்னும் பெரிதாகக் குரைக்கத் தொடங்கினான். நான் அவனைக் கவனியாமல் என் கொப்பியைத் தேடினேன். என்ரை கொப்பி பீலித் தண்ணீரை ஏந்தும் பெரிய அண்டாவில் உல்லாசமாக நீந்திக் கொண்டிருந்தது. இப்போ வீமனை ஏதாவது செய்ய வேனும் என்ற எண்ணம் எனக்கு வந்தது. கொப்பியை எட்டி எடுக்க அது என் கைகளுக்கு எட்டாத ஆழத்தில் புதைய, என் கோபம் வெறியாக மாறிற்று. என் பார்வையில் - மூலையில் இருந்த தும்புத்தடி பட்டது. அதைத் தூக்கிக் கொண்டு வீமனைத்தேடி ஓடினேன்.

வாசலில் ஒரே ஆரவாரமாக இருந்தது. அம்மா உரத்த குரலில் யாரையே அதட்டிக் கொண்டிருந்தாள். நான் கையிலிருந்த தும்புத்தடியைக் கீழே போட்டு விட்டு, அம்மாவுக்கு அருகே போனேன். அங்கே எங்கடை கேற்றுக் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு இரண்டு பிள்ளைகள் நின்றார்கள். அவர்கள் கோலம்... கிழிந்த சட்டை, பரட்டைத் தலை, ஒட்டி உலர்ந்த முகம்!... ஓ பிச்சைக்காரப் பிள்ளைகள். என் மனம் எடை போட்டது. அம்மாவின் அதட்டல் அதை நிருபித்தது. பிச்சையெண்டு வந்து, களவுக்கு உளவு சொல்ல வந்திருக்குதுகள்! கழுதைகள்! இஞ்சை ஒண்டும் தரஏலாது ஓடுங்கோ! அம்மா சொல்ல, வீமனும் அதை நாய்ப்பாஷையில் மொழி பெயர்த்து, பலமாகக் குரைத்துக் கொண்டிருந்தான். நான் அவர்களை வடிவாகப் பார்த்தேன். ஒண்டுக்கு எட்டு வயதிருக்கும். மற்றதுக்கு ஆறு வயதிருக்கும். சின்னவன் அம்மாவின்ரை அதட்டலிலை பயந்து போயிருந்தான். பெரியவன் சொன்னான் அம்மா! இரண்டு நாளா ஒண்டுஞ் சாப்பிடவில்லையம்மா. பசிக்குதம்மா!... அவன் அழுதுகொண்டு சொல்ல, எனக்கு வீமனில் இருந்தகோபம் மாறி, அந்தப் பிள்ளையளுக்கு ஏதாவது குடுக்கவேணும் எண்ட எண்ணம் தோன்றியது.

என்ரை வயதுப் பிள்ளை! வாயைத் திறந்து பசிக்குது எண்டு சொல்லுது அம்மா ஏன் வித்தியாசமா நினைக்கிறா! களவுக்கு வந்ததுகள் எண்டு பேசிறா! நான் பசிக்கல்லை எண்டு சொன்னாலும், வலுக்கட்டாயமாக எனக்கு ஊட்டி விடுறவா! ஏன் இப்பிடி! எனக்கு ஒண்டும் விளங்கவில்லை. ஆனால் ஒரு கள்ள யோசனை வந்தது.... அம்மா பிள்ளையள்ளிட்டை சொன்னா நாயை விட்டுக் கடிக்கவிடுவன் ஓடுங்கோ! வீமனும் அதைக் கேட்டு கேற்றுக் கம்பியைத் தாவி னான். நான் கீழே கிடந்த தும்புத்தடியை எடுத்து வீமனுக்கு அடிச்சன். வீமன் ஊளையிட்டுக் கொண்டு வீட்டுப் பக்கம் ஓடினான். பிள்ளையள் இரண்டும் தெருவாலை ஓடிச்சுகள். அம்மா கொன்னாள் நல்ல வேலை செய்தாயடி! அவளுக்கு பிள்ளையள் போனது மகிழ்ச்சி. தும்புத்தடியை எடுத்துக் கொண்டு போனாள். நானும் பின்னாலை போனன்!

கொஞ்சநேரம் கழிய அம்மாவுக்கு ரீயூசனுக்குப் போறன் எண்டு சொல்லி வெளிக்கிட்டன். என்னடி இண்டைக்கு ரீயூசன் இல்லை எண்டாய்! இப்ப இருக்கெண்டிறாய். நான் வீமன் கொப்பியைத் தண்ணியுக்கை விழப்பண்ணியதை நினைச்சன்! இல்லையம்மா! வீட்டுப்பாடம் ரீச்சரிட்டைக் கேட்டு செய்யவேணும்! சரி போட்டு இருட்டுப்பட முன்னம் வந்திரு. அம்மா அனுமதி தந்துவிட்டாள். நான் குசினிக்கை போய்ப் பார்த்தன். என்ன பிள்ளை பசிக்குதே! மத்தியானமும் வடிவாச் சாப்பிடவில்லை. மோதகம் அவிச்சு வைச்சிருக்கிறன் சாப்பிட்டுப்போ. சொல்லி விட்டு அம்மா பின் வளவுக்கை போக.. நான் அவசரமாக மோதகங்களை என்ரை புத்தகப் பையுக்கை எடுத்து வைச்சுக் கொண்டு, என்ரை சைக்கிளில் தாவி ஏறி உதைஞ்சு கொண்டு காற்றாய்ப் பறந்தேன்.

ஆலமரத்தடிப் பிள்ளையார் கோவில் சந்தி வந்திட்டு. என் பார்வையை எல்லா இடமும் படரவிட்டன். அங்கை! கோயில் கேணிப்படியிலை அந்தப் பிள்ளைகள்! அப்பாடா! கண்டு பிடித்துவிட்டேன். மெல்ல சைக்கிளைவிட்டு இறங்கி, அவர்களை நோக்கிச் சைக்கிளையும் உருட்டிக் கொண்டுபோய் நிப்பாட்டினேன். சின்னவன் என்னைக் கண்டவுடன் அக்கா வாறா! என்று சொன்னான். பெரியவனோ என்னைச் சந்தேகமாகப் பார்த்தான். எங்கடை அம்மா பொல்லாதவ உங்களுக்கு ஒண்டும் தரமாட்டா! நான் உங்களுக்கு மோதகம் கொண்டு வந்திருக்கிறன்! இந்தாங்கோ! சாப்பிடுங்கோ! சின்னவன் ஓடிவந்து என்னிடம் மோதகத்தை வாங்கி வாயில் வைச்சுக் கடிக்க, பெரியவன் வந்து அதை வாங்கி என்னிடம் எறிஞ்சான். நீ இதைக் களவெடுத்துத் தானே கொண்டு வந்தனி! அம்மாவுக்குத் தெரியாமல் நீ களவெடுக்கிற படியால் தான் எங்களையும் அவ கள்ளரெண்டு கலைச்சவ! நாங்கள் களவு எடுக்கிற ஆட்கள் இல்லையெண்டு என்ரை அம்மா நெடுகச் சொல்லுறவ. அவன் சொல்லச் சொல்ல எனக்குள் ஏதோ உடைந்தது. நான் அமமாவுக்குத் தெரியாமல் செய்த களவு! எனக்கே வெக்கமாயிருந்தது. பொய் சொலலி, களவும் செய்த நான், அந்தப் பிள்ளைகளுக்கு ஒண்டும் சொல்லாமல் திரும்பினேன். எங்கடை பள்ளிக் கூட ரீச்சரை நினைச்சுக் கொண்டு சைக்கிளில் ஏறி ஓடத் தொடங்கினேன். என் நெஞ்சில் சுமை ஒன்று ஏறியிருந்தது!...

மனோன்மணி சண்முகதாஸ்

# பிறந்த குழந்தையும் நோய்களும்

(கடந்தவாரத் தொடர்ச்சி...)

## போட்டோதெரபி

இயற்கை ஒளிபடுவதால், பைலுரூபின்கள் நீர்மக்கரைசலாக மாறிவிடும். அது குழந்தை மலம் கழிக்கும்போது, எளிதாக வெளியேறிவிடும். இந்தமாதிரியான நேரங்களில் குழந்தையின் ஒரு கண்ணைத் திரைகொண்டு மறைக்கலாம்.

## எக்ஸ்சேஞ்ச் டிரான்ஸ் பியூஷன்

போட்டோதெரபி முறையில் கட்டுப்படுத்தமுடியாத மஞ்சள் காமாலைக்கு உச்சக்கட்ட சிகிச்சையாக இந்தச் சிகிச்சை மேற்கொள்ளப்படும். இந்தமுறையின்படி பைலுரூபின்கள் அதிகமாக இருக்கும். இரத்தத்தை நீக்கிவிட்டுக் குறைந்த பைலுரூபின்கள் கொண்ட இரத்தத்தைக் குழந்தைக்கு வைத்தியர்கள் செலுத்துவார்கள்.



## பெற்றோருக்கு பதற்றம் ஏற்படுத்தும் வழக்கமான விடயங்கள்

புதிதாகப் பிறந்த குழந்தைகள் எல்லாம் சாதாரணமாக இருக்கின்றனவா? எல்லா உறுப்புகளும் ஒழுங்காகச் செயற்படுகின்றனவா? என்பதில் பெற்றோருக்குத் தீராத கவலை இருக்கும். வழுக்கத்தில் இல்லாத ஏதாவது ஒரு சிறுகாயம், வீக்கம் இருந்தால்கூடப் பெற்றோர் பதற்றம் அடையக்கூடும்.

இனிப் பிறந்த குழந்தைகளிடம் காணப்படும் சில விடயங்களையும் குறிப்பிட்ட நேரம் வந்ததும் மறைந்துவிடும். சில ஆபத்து இல்லாத வெளிப் பாடுகள் பற்றியும் பார்ப்போம்.

## மைலியா

மூக்கு மற்றும் முகத்தின் மீது வெள்ளை நிறப்புள்ளிகளாகத் தோன்றும். இவை எண்ணெய்ப் பசைத் தன்மை கொண்ட சுரப்பிகளின் பெருக்கத்தால் ஏற்பட்ட வெளிப்பாடுதான். இவைகள் தானாகவே மறைந்துவிடும்.



## எரித்தோமா ரிக்ஸிகம்

பெயரை வாசித்ததும் ஏதோ பயங்கரமான நோய் என்று நினைத்துவிடாதீர்கள். எந்தவிதமான தீங் கும் செய்யாத சிவப்பு நிறத் திட்டுகள். இவை உடல் பகுதி மற்றும் முகத்தில் தோன்றும். தோன்றியது போலவே தானாகவே மறைந்து விடும்.

## மங்கோலியன் ஸ்பொட்ஸ்

நீல நிறத்தில் காட்சியளிக்கும் இந்தப் புள்ளிகள் பின்புறத்திலும், உடலிலும் தோன்றும். குழந்தையின் முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடும்போது இந்தப் புள்ளிகள் தானா கவே மறைந்துவிடும்.

## ஸ்டோர்க் பைட்ஸ்

குழந்தையின் கழுத்துப் பிடரி, கண் இமைகள், முன் நெற்றி, மூக்கு ஆகிய இடங்களில் இளஞ்சிவப்பு மற்றும் பழுப்பு நிறத்தில் புள்ளிகள் காணப்படும். இதற்குப் பல புராணக் கதைகள் சொல்வார்கள். ஆனால், கவலைப்படவேண்டாம்.

சில குழந்தைகளுக்குத் தோல் உரியலாம். ஆனால் இதுபற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. உரிந்துகொண்டு இருக்கும் தோலின் அடியிலுள்ள தோல் சாதாரணமாகவும், ஆரோக்கியமாகவும் காணப்படும். ஒருவேளை தோல் வரண்டு இருப்பதாகக் கருதினால் வைத்தியரிடம் காட்டலாம்.

## மார்பு சிவந்து காணப்படுதல்

ஆணோ, பெண்ணோ எந்தக் குழந்தையாக இருந்தாலும், பிறந்த 3 முதல் 4 ஆம் நாளில் குழந்தையின் மார்புகள் அதிகமாகச் சிவந்து காணப்படும். மார்புக் காம்புகளில் இருந்து வெள்ளை நிறத் திரவம் மெதுவாகக் கசிய ஆரம்பிக்கும். இந்தத் திரவத்தை மோகினி பால் என்று சொல்கிறார்கள். இதற்கு எந்தவிதமான சிகிச்சையும் வேண்டாம். ஆனால் மார்புகளை அழுத்தி விடுவதோ, மசாஜ் செய்வதோ நசுக்கவோ கூடாது. (தொடரும்...)

# வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க பிரிவுக்கு நிதி ஒதுக்கப்பட்டும் புனரமைப்பு இன்னுமில்லை

பருத்தித்துறை பிரதேசசபையின் செம்பியன்பற்று உப அலுவலகம் மூலமாக - வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இந்த ஆண்டு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப் பட்ட நிதி ஒதுக்கீட்டின்கீழ் - வீதிகள் புனரமைப்பு, கட்டடம் அமைத்தல் ஆகியவற்றுக்கு 11 லட்சத்து 20 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உடுத்துறை நாகப்பர் வீதி புனரமைப்பு செய்வதற்கு 70 ஆயிரம் ரூபாவும்,

ஆழியவளை பாடசாலை வீதி புனரமைபபு செய்வதற்கு 2 லட்சதது 50 ஆயிரம் ரூபாவும்,

போக்கறுப்பு- நித்தியவெட்டை வீதி புனரமைப்புக்கு 7 லட்சம் ரூபாவும்,

உடுத்துறை இளைப்பாற்று மண்டபம் அமைப்பதற்கு 1 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நான்கு வேலைத்திட்டங்களுக்கும் ஆறு மாதங்களுக்கு முன்னர் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தகாரரால் எந்தவொரு ஆரம்ப வேலைகளும் இதுவரை செய்யப்படவில்லை.

மழைகாலம் ஆரம்பித்துள்ள இந்தவேளையில், மூலப்பொருட்கள் கொண்டுவரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வருட முடிவுக்குள் இந்த வேலைகளைச் செய்து, பாரம் கொடுக்க முடியாவிட்டால், இந்தப் பணம் மீளப்பெறப்படும் நிலை ஏற்படும் எனத் தெரியவருகிறது. (21)

## வடமராட்சி கிழக்கில் நுளம்புக் குடம்பிகள் அழிப்பு

அண்மையில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக, வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் நுளம்புத் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுகிறன.

மலேரியாத்தடை இயக்க ஊழியர்கள் - தாளையடி, மாமுனை, செம்பியன்பற்று வடக்கு, தெற்கு கிராமங்களில் நுளம்புத் தொல்லையைக் குறைப்பதற்காக வீடுகளில் டெல்ராமற்றீன் கிருமிநாசினியைத் தெளிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

குளங்கள், துரவுகள், பள்ளங்களில் நீர்தேங்கி நிற்பதால், அவற்றில் நுளம்புக் குடம்பிகளை அழிப்பதற்கு, அபெற் கிருமிநாசினியைத் தெளிக்கப்படுகிறது. (21)

## உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

(கிளிநொச்சி)

கரைச்சிப் பிரதேச மாவீரர் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப போட்டி, மீண்டும் நேற்றுக்காலை 8 மணிக்கு உதய தாரகை விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகும்.

இந்த உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டி - நாளையும், நாளை மறுதினமும் காலை 8 மணிக்கு கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

எனவே, கால் இறுதிச் சுற்றுப் போட்டிக்குத் தெரிவாகியுள்ள அணிகள் - தங்களைத் தயார்படுத்திக் கொள்ளுமாறும், போட்டிகளுக்கு சமூகம் தருமாறும் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் த.ராஜா கேட்டுள்ளார்.

# வட்டக்கச்சியிலிருந்து கிளிநொச்சி செல்லும் வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது

வட்டக்கச்சியிலிருந்து கிளிநொச்சி செல்லும் பிரதான வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

இந்த வீதி பல வருடங்களாகத் திருத்தப்படாது காணப்பட்டபோதிலும், இந்த வருட முற்பகுதியில் கிறவல் மண்ணால் செப்பனிடப்பட்டது.

தற்போது பெய்த அடைமழையால், வீதிகளை மூடி வெள்ளம் பாய்ந்ததால் - வீதிகள் அரிப்புக்குள்ளாகி குன்றும், குழியுமாகக் காணப்படுகிறது. இதனால் இந்த வீதியால் அவசர நோயாளர்களை ஏற்றிச் செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதைவிட விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புக்களும் காணப்படுகிறது.

இந்த வீதியை, சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்தி, புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (9)




# விவசாயக் கடனுதவி

வவுனியா மாவட்ட சிறுவர் நலத் திட்டத்தால், இளமருதங்குளக் கிராமத்தில் போரால் பாதிப்புற்ற சிறுவர்கள் இனங்காணப்பட்டு, அவர்களின் பெற்றோர்களுக்கு விவசாயத்துக்கான கடன் வழங்கப்பட்டது.

இந்தக் கடன் உதவியாக - ஒரு குடும்பத்துக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் 18 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

இதை சனச வங்கியின் நிதியுதவியுடன் வவுனியா அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தால் வழங்கப்பட்டது.



வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபராக இருந்து இடமாற்றம் பெற்ற வீ.பீ.வேலாயுதம்பிள்ளையின் பிரியாவிடை நிகழ்வில் கலந்துகொண்ட கிராம உத்தியோகத்தர்களையும், மக்கள் சார்பில் அன்பளிப்பு வழங்குவதையும் படத்தில் காணலாம். (21)

# யுத்த அனர்த்தங்களால் உயிரிழந்த பொதுமக்களுக்கு மன்னாரில் அஞ்சலி

யுத்த அனர்த்தங்களின் காரணமாகத் தமது இன்னுயிரை இழந்த பொதுமக்களை நினைவு கூரும் முகமாக, மன்னார் வாழ்வுதயம் கடந்த இரண்டு வருடங்களாக ஆன்ம சாந்திக்கான அஞ்சலி நிகழ்வை நடத்தி வருகிறது.

இதேபோன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு மன்னார் நகர மண்டபத்தில் மேலும் சிறப்பான முறையில் இடம்பெறவுள்ளது

இந்த நிகழ்வு வாழ்வுதய இயக்குநர் அருட்திரு பி.யேசுராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக மன்னார் ஆயர் இராயப்பு யோசேப் கலந்து கொள்ளவுள்ளார்.

போரால் இன்னுயிரை இழந்தவர்களின் குடும்பத்தில் ஒருவர் வீதம்- மொத்தமாக 700 பேரை வரவழைத்து, அவர்கள் ஒவ்வொருவருக்கும் அனபளிப்புப் பொதிகள் வழங்கி கௌரவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த நிகழ்வில் அரசாங்க அதிபர்கள், நாடாளுமன்ற உறுப்பினரகள் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.



புதுக்குடியிருப்பு - பரந்தன் பிரதான வீதியில் புளியம்பொக்கணைச் சந்திக்கருகில் உள்ள கோஸ்வேயூடாக வெள்ளம் பாய்ந்து கொண்டிருப்பதையும், போக்குவரத்துச் செய்யும் மக்கள் இலகுவாக உழவு இயந்திரம் மூலம் ஏற்றி இறக்கப்படுவதையும் படத்தில் காணலாம்.

படம் : வே.சீலன்

# புனரமைப்பு வேலைத்திட்டத்துக்கென நாடாளுமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீடு

பருத்தித்துறை பிரதேசசபையின் செம்பியன்பற்று, குடத்தனை உப அலுவலகங்கள் மூலமாக, வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் - யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் இந்த ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின்கீழ் - கட்டடம், மின்சாரம், விளையாட்டு, தளபாடம் ஆகியவற்றுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படவேண்டிய வேலைத்திட்டங்களில் -

செம்பியன்பற்று வடக்கு சென். பிலிப்நேரீஸ் சனசமூகநிலையக் கூரை திருத்தம் செய்வதற்காக 50 ஆயிரம் ரூபாவும்,

குடத்தனை செல்வா படிப்பகக் கட்டடம் புனரமைப்புச் செய்வதற்கு ஒரு லட்சம் ரூபாவும்,

குடத்தனை மகளிர் அபிவிருத்திச் சங்கக் கட்டடம் புனரமைப்புச் செய்வதற்கு 30 ஆயிரம் ரூபாவும்,

மருதங்கேணி வடக்கு வள்ளுவர் சனசமூகநிலையக் கட்டடப புனரமைப்புக்கு 30 ஆயிரம் ரூபாவும்,

செம்பியன்பற்று தெற்கு மகளிர் அபிவிருத்திச் சங்கம் புனரமைப்புக்கு 30 ஆயிரம் ரூபாவும்,

உடுத்துறை கிராம அபிவிருததிச் சங்கம் கட்டட நிர்மாணம் செய்வதற்கு ஒரு லட்சம் ரூபாவும்,

ஆழியவளை அருணோதயா விளையாட்டுக் கழக விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கு 5 ஆயிரம் ரூபாவும்,

வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச தளபாடக் கொள்வனவுக்கு 5 ஆயிரம் ரூபாவும், உடுத்துறை ஓடுமீன் விளையாட்டுக்கழக விளையாட்டு உபகரணம் கொள்வனவுக்கு 5 ஆயிரம் ரூபாவும், குடத்தனை சனசமூக நிலையம் பொது மலசலகூடம் அமைப்பதற்கு 50 ஆயிரம் ரூபாவும்,

மணற்காடு கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க தளபாடம் கொள்வனவு செய்வதற்கு 30 ஆயிரம் ரூபாவும்,

செம்பியன்பற்று கிராம அபிவிருத்திச்சங்க சூரியசக்தி மின்கலம் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும், வெற்றிலைக்கேணி வெளிச்சவட்டுக்கு 1 லட்சம் ரூபாவும்,

மருதங்கேணி கிராம அபிவிருத்திச் சங்க சூரிய சக்தி மின்கலம் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும்,

வடமராட்சி கிழக்கு மகளிர் கிராம அபிவிருத்திச்சங்க தளபாடம் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும்,

மாமுனை கலைமகள் விளையாடடுக்கழக விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவுமென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (21)



வட்டக்கச்சி சில்வா வீதிச் சந்தியிலுள்ள மதகு சேதமடைந்திருப்பதால் இந்த வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதைப் படத்தில் காணலம்.

படம் : வட்டக்கச்சி செய்தியாளர்

# எயிட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(கிளிநொச்சி)

உலக எயிட்ஸ் தினமான டிசம்பர் முதலாம் திகதி - கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில், சுகாதார ஊழியர்களுக்கு எயிட்ஸ்நோய் சம்பந்தமான கருத்தரங்கு சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் நடைபெற்றது.

இந்தத் தினத்தையொட்டி, கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில், நூற்றுக்கணக்கானோர் பங்குபற்றினர்.

இநதப் போட்டிக்கான முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால், பரிசளிப்பு பற்றிய வபரங்கள் -விரைவில் வெளியிடபபடும் என, கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிபபாளர் தெரிவித்துள்ளார்.

## பிட்டியாரப்புப்பாலம் சேதம்

மன்னார் பிட்டியாரப்புப் பாலம் உடைந்து காணப்படுகிறது. இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பாலம் மிக நீண்டகாலமாகத் திருத்தப்படாத நிலையில் உள்ளது. தற்போது பெய்து வரும் மழையால், பாதிக்கப்பட்ட இந்தப் பாலத்தினூடான போக்குவரத்து மேற்கொள்ள முடியாத நிலையில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை*
*தீரா இடும்பை தரும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## ஜே.வி.பி யினரின் எச்சரிக்கை தென்பகுதிக்கான அச்சுறுத்தலே...!

கடைசியாக ஜே.வி.பி கிளர்ச்சிக் குழுவினர் தாம் – தமது பாரம்பரிய சுயத்துவத்தில் இருந்து இன்னமும் மாறவில்லை என்பதை வெளிப்படுத்திவிட்டனர்.

1971 ஏப்ரலில் ஒழுங்கான திட்டமிடலோ, தொலைநோக்குச் சிந்தனையோ, உறுதியான இலட்சியப் பிடிப்புடன் கூடிய கொள்கைகளோ இன்றி, அமைப்பின் தலைவரான ரோகணவிஜேவீர கைதாகிச் சிறைப்பட்டிருந்த வேளையில் மக்கள் விடுதலைக்கான ஆயுதப் புரட்சி என்று கூறிக் கொண்டு ஜே.வி.பி யினர் மேற்கொண்ட கிளர்ச்சி நடவடிக்கைகள் குறித்தும், அதன் பரிதாபகரமான தோல்வி குறித்தும் அது தென் பகுதியில் ஏற்படுத்திய பேரழிவுகள் குறித்தும் மீண்டும் மீண்டும் எழுதி விபரிக்க வேண்டிய அவசியமே கிடையாது.

தென்பகுதிச் சிங்கள மக்களே குறிப்பாக இளைஞர், யுவதிகளே ஜே.வி.பி யினரின் அந்த அவிவேகத் தன்மையுடன் கூடிய கிளர்ச்சி நடவடிக்கைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டு பலியானார்கள். அப்போதைய பிரதமரும் இப்போதைய ஜனாதிபதியின் தாயாருமான ஸ்ரீமாவோ பண்டார நாயக்க இந்தியப் படை உதவியுடன் அந்தக் கிளர்ச்சியை இரும்புக்கரம் கொண்டு நசுக்கி அழித்த வரலாறு இரத்த வரிகளால் எழுதப்பட்ட ஒன்றேயாகும்.

சுமார் 25000 இற்கும் அதிகமான தென் பகுதிச் சிங்கள இளைஞர், யுவதிகளின் உதிரத்தைப் பெருக்கெடுத்து ஓடவைத்து, தெருவெங்கும் அவர்கள் உடல்களை தீயூட்டி எரித்து வெறியாட்டம் ஆடிய சிங்கள அரச படையினர் அந்தக் கிளர்ச்சியை அடக்கிய விதம் காட்டுமிராண்டித்தனமான ஒன்றாகும்.

ஜே.வி.பி யின் ஆயுத பலத்தின் பலவீனத் தன்மையும் வாச்சவடாற்தனம் கொண்ட கொள்கைப் பிரசாரத்தின் வெறுமையும் சிங்கள இளைஞர், யுவதிகளை பலிகொள்ள வைத்ததுடன், இலங்கை அரசுக்கெதிரான – அரச அடக்குமுறைக்கெதிரான எந்தக் கிளர்ச்சியையும் முதலாளித்துவ அரசுகள் எப்படி அடக்கும் என்ற அனுபவ பாடத்தையும் கற்பித்தது.

ஸ்ரீமாவோ அரசின் சிங்கள இளைஞர்கள், யுவதிகள் மீதான இரத்த வெறிபிடித்த அராஜக அடக்குமுறையால் மக்கள் அடைந்த பீதி அடுத்த தேர்தலில் அவரது படுதோல்விக்கு வழி வகுத்தது.

அடுத்து ஜே.ஆர் பதவிக்கு வந்ததும் ஜே.வி.பி மீதான தடையை அரசியல் சுயநலத்துக்காக நீக்கியதுடன் ரோகண விஜேவீர உட்பட அனைத்துத் தலைவர்களையும் விடுதலை செய்தார்.

அவரின் இந்த வரலாற்றுத் தவறின் மூலம் ஜே.வி.பி பெற்றுக் கொண்ட அரசியல் அனுகூலங்கள் அதனை மீண்டும் வளர்ச்சி பெற உதவியதுடன்– அந்த வளர்ச்சி மீண்டும் ஒரு கிளர்ச்சிக்கு வித்தாகவும் மாறியது. 1987 இல் இந்தியப் படையின் இலங்கையிலான தரையிறக்கத்தையடுத்து அதனை முற்றாக எதிர்த்த ஜே.வி.பி யினர் இரண்டாவது கிளர்ச்சி நடவடிக்கையில் இறங்கினர்.

மீண்டும் தென்பகுதி இரத்தக் காடாகியது. ஆறுகள் பிணங்களைச் சுமந்தன. நடுத்தெருவில் அப்பாவி மக்களும், இளைஞர்களும் அரச மறைபடைகளாலும் ஜே.வி.பி யினராலும் மாறி மாறி ரயர் போட்டு எரியூட்டுவது அன்றாட நிகழ்வாகியது. இரண்டாண்டு கால வெறியாட்டம் 1990 இன் இறுதியில் முடிவுக்கு வரும் போது அந்தக் கிளர்ச்சித் தலைவர் மிகச் சாதாரண முறையில் கைதாகிக் கொல்லப்பட்டார்.

அந்த ஜே.வி.பி யினர் இரண்டாவது கிளர்ச்சியும் அவமானகரமான, பரிதாபகரமான தோல்வியைத் தழுவியதுடன் பல்லாயிரக் கணக்கானோரின் உயிரையும் காவு கொண்டது. இதற்கும் அவர்களின் தீர்க்க தரிசனமற்ற அரசியல் அணுகு முறையே காரணமாயிற்று. அது ஜே.வி.பி யின் தலைமைத்துவத்தின் பலவீனமான தன்மையை மீண்டும் ஒரு முறை நிரூபித்தது.

இப்போது எந்தச் ஸ்ரீமாவோ பண்டார நாயக்கவினால் ஈவிரக்கமின்றி பலிவாங்கப்பட்டார்களோ, அவரின் மகளுடன் எவரால் தனது கணவனைக் கொன்ற கொலைவெறியர்கள் என்று விரல் சுட்டிக் குற்றம் சாட்டப்பட்டார்களோ – அந்த ஜனாதிபதியுடன் எந்தவித உணர்ச்சிகளும் அற்றவர்களாய் கூட்டுச் சேர்ந்து பதவிப் பதர்களாகியுள்ள நிலையில் புலிகளுக்கு இடைக்கால நிர்வாகத்தைக் கொடுத்தால் மீண்டும் ஆயுதக்கிளர்ச்சி வெடிக்குமென்று எச்சரித்துள்ளார்கள்.

அதாவது ஜே.வி.பி யினர் மீண்டுமொரு தொலைநோக்குச் சிந்தனையற்ற கிளர்ச்சியை ஏற்படுத்தி தென்பகுதி இளைஞர்களை காவுகொடுக்கத் தயாராகி விட்டார்கள் என்பதையே அவர்களின் எச்சரிக்கை உணரவைப்பதாக உள்ளது.

ஒருகாலத்தில் புரட்சிவாதிகள், கிளர்ச்சியாளர்களாக மாறி இப்போது இன வெறியர்களாக பரிணாம வளர்ச்சி கண்டு கலவரம் செய்வோம் என்று அச்சுறுத்தல் விடுப்பது – தென்பகுதி மக்கள் அவர்களை அங்கீகரித்து வாக்களித்த தவறுக்கு பெரும் விலையை அனாவசியமாகக் கொடுக்கப் போகிறார்கள் என்பதற்கான சிவப்பு விளக்கு சமிக்ஞையாகவே ஜே.வி.பி யினரின் இந்த எச்சரிக்கை உள்ளது.

## நாடும் நடப்பும்

விஷ(ம)ப் பிரசாரம்



செய்தி:- இலங்கை வானொலி விடுதலைப் புலிகளுக்கு எதிரான அவதூறுப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றதாக விடுதலைப் புலிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

# ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சியில் ஊடகவியலாளர்கள் படுகொலை

### நாடாளுமன்றில் அரியநேத்திரன் எம்.பி

ஜனாதிபதி சந்திரிகாவின் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் துணிச்சலுடன் செயற்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிபீடமேறிய ஒரு மாதத்திற்குள் மட்டக்களப்பு ஊடகவியலாளர் ஜி. நடேசன் கொலை செய்யப்பட்டார்.

சந்திரிகா அம்மையாரின் ஆட்சியிலேயே ஊடகவியலாளர்கள் இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் நாடாளுமன்றில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

ஊடகத்துறை அமைச்சின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் -

இலங்கையில் ஊடகங்கள் தமிழ் மக்களின் வாழ்க்கையுடன் விளையாடுகின்றன. சமாதானத்தின் எதிரியாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தென்றல் சேவையில் தினமும் ஈ.பி.டி.பி. கட்சியினரால் 'இதயவீணை' என்ற பெயரில் பச்சைப் பொய்கள் கூறப்படுகிறது. இது சமாதானத்துக்கு எதிராக விதைக்கப்படுகிறது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இதய வீணையை ஒலிபரப்புவதானால் புலிகளின் குரல் ஒலிபரப்பையும் உங்களால் ஒலிபரப்ப முடியுமா எனவும் அரியநேத்திரன் கேள்வி எழுப்பினார்.

## வீதிகள் திருத்தப்படாமையால் போக்குவரத்துக்குச் சிரமம்!

(கொக்குவில்)

கோண்டாவில் கிழக்கிலிருந்து பொற்பதிவீதியூடாக, பிறவுண் வீதி மற்றும் யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் வீதிகள் சேதமடைந்து குழிகளாக காணப்படுகிறது.

இதனால் பொதுமக்கள் போக்குவரத்தில் பெரும் சிரமப்படுகின்றனர்.

திருத்தப்பட்ட இந்த வீதிகள் மீள்திருத்தம் செய்யப்படாமையாலேயே சேதமடைந்திருக்கின்றன. அத்துடன், இந்த வீதியில் அமைந்துள்ள இறைச்சிக் கடை, தவறணை சாப்பாட்டுக் கடைகள் உட்படப் பலவற்றின் கழிவுப் பொருட்கள் குழிகளில் தேங்கிக் கொள்வதால் துர்நாற்றமும் வீசுகின்றது.

இந்த வீதியூடாக பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அதிகாரிகள் எனப் பலரும் பயணிப்பது குறிப்பிடத்தக்கது. (82)

## நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய ஒளிவிழாவும் கண்காட்சி நிகழ்வும்!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் கிறிஸ்மஸ் ஒளிவிழா, பெயர் வளைவு திரை நீக்கம், முறைசாராக்கல்விக் கண்காட்சி என்பன நாளை முற்பகல் 11 மணிக்கு - தலைவர் ச.சத்தியவரதன் தலைமையில் வித்தியாலய உள் அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக, தீவக வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜீ.வி.ராதாகிருஷ்ணன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.அரசரட்ணம், உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.கணபதி, சமாதான நீதிவான் சி.வ.சங்கரப்பிள்ளை, ஆசிரிய ஆலோசகர் பி.திருஞானசீலன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக நெடுந்தீவு பங்குத்தந்தை எஸ்.ஜெபநேசரட்ணம் அடிகள், தென்னிந்திய திருச்சபை வண. போதகர் ஆர்.யோன்.செல்வம் அடிகள், கடற்புலிகளின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் எஸ்.அருணன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

வாழ்த்துரை, ஆசியுரை, நடனம், கோலாட்டம், கிறிஸ்மஸ் கீதங்கள், தாளலயம் நாட்டுக்கூத்து ஆகிய கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (21)

## ஒரு தொகுதி பாடநூல்கள் இன்று எடுத்துவரப்படும்!

2005 ஆம் கல்வி ஆண்டுக்கான யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கான இலவச பாடநூலின் ஒரு தொகுதி பாடநூல்கள் இன்று 13 லொறிகளில் எடுத்து வரப்படுவதாக, யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை, அடுத்த ஆண்டு உயர்தரப் பரீட்சை நடைபெறாத பாடசாலைகள் - முதலாம் தவணை - ஜனவரி 3 ஆம் திகதி முதல் ஏப்ரல் 8 ஆம் திகதிவரையும், இரண்டாம் தவணை - ஏப்ரல் 27 ஆம் திகதிமுதல் ஜூலை 29 ஆம் திகதிவரையும், மூன்றாம் தவணை - செப்ரெம்பர் 5 ஆம் திகதி முதல் டிசம்பர் 3 ஆம் திகதிவரையும்,

உயர்தரப் பரீட்சைகள் நடைபெறுகின்ற பாடசாலைகளில் இரண்டாம் தவணை - மே 18 ஆம் திகதிமுதல் ஓகஸ்ட் 12 ஆம் திகதிவரையும், மூன்றாம் தவணை - ஓகஸ்ட் 29 ஆம் திகதிமுதல் டிசம்பர் 19 ஆம் திகதிவரையும் நடைபெறும்.

அதேவேளை கல்விப் பொதுத்தராதரப் பரீட்சை விடைத்தாள்கள் ஜனவரி 12 ஆம் திகதிக்கு முன் திருத்தும் பணிகள் முடி வடையும் எனவும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் நேற்றுத் தெரிவித்தார்.

### நெடுந்தீவில்

## பஸ்சேவை சீரின்மையால் போக்குவரத்தில் சிரமம்!

நெடுந்தீவு பிரதேச உள்ளூர் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பஸ் அடிக்கடி பழுதடைந்து சேவையிலிருந்து விலகுவதால், பயணிகள் படகுமூலம் நெடுந்தீவை வந்தடைவோர் தங்கள் சொந்த இடங்களுக்கு உரிய நேரங்களில் செல்லமுடியாது பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

பஸ் சேவை இடம்பெறாத நாட்களில் நெடுந்தீவு பிரதேச சபை, அல்லது நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கத்துக்குச் சொந்தமான உழவு இயந்திரங்களைப் பயன்படுத்தவேண்டும் என நெடுந்தீவு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டபோதும், இந்த நடைமுறை சீராக மேற்கொள்ளப்படாமையால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

உரியவர்கள் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து சீரான பயணத்தை மேற்கொள்ள ஒழுங்கமைக்க வேண்டுமென மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்புள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# இவ்வார பலன்கள்
## 03-12-2004 09-12-2004

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | |
| யுரே | 03 மா. 4.57 சிங் - சந்<br>05 பி.இ. 3.21 கன் - சந் | | சனி சந் |
| நெப் | 06 கா. 8.50 விரு - புத<br>08 ப. 10.07 துல - சந் | | |
| புத | சூ | சுக், செவ் கேது | குரு |

### மேடம்
*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு குரு 6 ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால குடும்பத்தில் இடையிடையே சச்சரவுகள் தோன்றும். புத்திரர்களால் செலவுகள் அதிகரிக்கும். செலவுகளும் அதிகமாகும். பணவருவாய் எதிர்பார்த்ததை விட குறைவாகவே இருக்கும். தேகசுகமும் பாதிப்படையும். திருமணப் பேச்சுக்கள் கைகூடுவதில் தாமதங்காணும். உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு வேலைப்பளு அதிகமாக இருக்கும். பொறுப்புகளும் அதிகரிக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் ஓரளவு நடைபெற்றாலும், வருவாய் அதிகம் வராது. கடனிலேயே போகும். மாணவர்களின் உற்சாகம் குறையும்.

### இடபம்
*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இடபராசிக்காரருக்கு வியாழ சுகம் இருப்பதால், பல நற்பலன்களைப் பெறுவர். குடும்பத்தினரிடையே மகிழ்ச்சியும், சிறப்பும் ஏற்படலாகும். இனபந்துக்களின் வருகை அதிகரிக்கும். பணவருவாய் நன்றாக அமையும். பெரியோர்களின் உதவி உண்டு. வெளிநாட்டிலிருந்து வருவாய் எதிர்பாராத விதமாகக் கிடைக்கும். திருமணப் பேச்சுக்கள் நன்மை தரும். உத்தியோகத்தர்களுக்கு தொழில் முயற்சியால் பாராட்டுக்கள் கிடைக்கும். வசதியான இடமாற்றங்கள் ஏற்படலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்படையும். பணம் நிறையும். மாணவர்கள் பல வகையாலும் முன்னேற்றமடைவர்.

### மிதுனம்
*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



மிதுனராசியில் ஜனனமானவர்களுக்கு ஏழரைச் சனி நடந்து கொண்டிருக்கிறது. குடும்பத்தில் அங்கத்தவர்களுக்கிடையே ஒற்றுமைக் குறைவு காட்டும். புத்திரர்களால் செலவு அதிகரிக்கும். செலவு அதிகமாயினும், பணவருவாய் ஓரளவு இருப்பதால், சமாளிக்க முடியும். பிரயாணங்களில் செலவு அதிகமாகும். விவாகப் பேசசுக்கள் காலதாமதத்தின் மேல் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புக்கள் அதிகமாகும். சக உதவிகள் குறையும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தமாகவே நடக்கும். கடன் வியாபாரம் கஷ்டத்தைக் கொண்டுவரும். மாணவர்களுக்கு கல்வித் துறையில் ஊக்கம் தேவை.

### கடகம்
*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசிக்காரருக்கு சனி சஞ்சாரமும், குரு சஞ்சாரமும் கஷ்ட பலன்களையே கொடுக்கும். தொழில்துறையில் பிரயாசைக்கேற்ப வருவாய் கிடைகாமற் போகும். செலவுகள் கட்டுக் கடங்காமல் இருக்கும். சீவியத்துக்கு கடன்பட வேண்டி வரலாம். தேகசுகமும் இடையிடையே பாதிக்கும். திருமணம் சம்பந்தமான பேச்சுக்கள் தடைப்படும். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் அச்சுறுத்தலுக்கு ஆளாக வேண்டிவரும். வேலைப்பளுவும் அதிகமாகும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சட்டத்திலேயே நடக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். மாணவர்கள் கல்வியைத் தொடர முடியாமல் அல்லற்படுவர்.

### சிங்கம்
*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் அந்நியோன்யம் சிறப்பாக அமையும. புத்திரர்களால் சந்தோஷமும், வருவாயும் கிட்டும். இனபந்துக்கள், நண்பர்களின் கொண்டாட்டம் கூடுதலாக இருக்கும். பணவருவாய் திருப்தியாக இருக்கும். தேகசுகம் பாதிப்படையாது. விவாகம் சம்பந்தமான பேச்சுக்கள் விரைவில் வெற்றியளிக்கும். உத்தியோகத்தர்களுக்கு மனம் போல் எல்லாக் கருமங்களும் நடக்குமாயினும், அதிகாரிகளின் திருப்திக்கேற்ப நடக்க வேண்டியிருக்கும். வர்த்தகத்துறை சிறப்பாக அமையும். ஆடம்பரப் பொருட்கள் விற்பனை செய்வோர் கூடிய லாபம் பெறுவர். மாணவர்களுக்கு முன்னேற்றங்களும், கல்வி உயர்ச்சியும் உண்டு.

### கன்னி
*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னிராசியில் பிறந்தவர்களுக்கு வாழ்க்கை பொதுவாகச் சிறப்பைக் கொடுக்கும். பலவகையாலும் பணம் வந்து சேரும். இருந்தாலும், செலவுக்கும் குறைவில்லை. எதிர்பாராத திடீர் செலவுகள் ஏற்படும். தொடங்கும் கருமங்களை நன்கு ஆலோசித்து செய்வது நன்று. சில சந்தர்ப்பங்களில் திசை திரும்பிப் பார்க்கும். தேக சுகத்தைப் பற்றிக் கூடுதல் அவதானமெடுத்தல் நன்று. திருமணப் பேச்சுக்கள் நன்றாக அமையும். உத்தியோகத்தர்களுக்கு சில மாறுதல்கள் ஏற்படக்கூடும். சக உதவிகள் உண்டு. அதிகாரிகள் ஒத்துழைப்பார்கள். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நடுத்தரமாக அமையும். கடன் வியாபாரத்தைத் தவிர்க்கவும். மாணவர்கள் கல்வியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தையடைவர். பாராட்டுக்கள் உண்டு.

### துலாம்
*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



துலாராசிக்காரருக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகளின் உதவிகள் உண்டு. தேகசுகத்தைப் பேணிக்கொள்வது நன்று. உறவினர்களின் வரவு அதிகமாக இருக்கும். விருந்துகள் மகிழ்ச்சி தரும். பணவருவாய் திருப்திகரமாக அமையும். சிலருக்கு இடையிடையே பிரயாணங்கள் கைகூடலாம். திருமணப் பேச்சுக்கள் தாமதமாகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு கூடுதலாக இருக்கும். மற்றவர்களுடைய வேலையையும் செய்ய வேண்டி நிர்ப்பந்திக்கப்படலாம். வர்த்தகத்துறையினருக்கு வியாபாரம் நடுத்தரமாக அமையும். பழைய கடன்கள் நிவர்த்தி செய்யப்படும். மாணவர்கள் சோம்பல் தனமுடையவர்களாகக் காணபபடுவர்.

### விருச்சிகம்
*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிகராசியில் பிறந்தவர்களுக்கு குரு பகவான் ஸ்தானத்திலிருப்பதால், பலவித நன்மைகள் கிட்டும். குடும்ப வாழ்க்கை சிறப்பாக அமையும். வீட்டில் சுப கருமங்கள் நடக்கும். இனபந்துக்கள், நண்பர்கள் இவர்களின் வரவால் குதூகலம் காணப்படும். பிள்ளைகள் மகிழ்ச்சியைத் தருவார்கள். பணவருவாய் சிறப்பாக இருக்கும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சி ததும்பக் காணப்படுவர். விவாக கருமங்கள் நிச்சயப்படுத்தப்படும். உத்தயோகத்தர்களுக்கு கௌரவம் மிகும். அதிகாரிகளின் பாராட்டுதல்கள் கிடைக்கலாம். வர்த்தகத்துறையினருக்கு வியாபாரம் ஓகோ என்று நடக்கும். வங்கி உதவிகளும் கிட்டும். மாணவர்கள் நல்ல முன்னேற்றமடைவார்கள். சிலருக்கு கல்வி சம்பந்தமான வெளிப்பயணங்கள் ஏற்படும்.

### தனுசு
*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



இவர்களுக்கு அட்டமத்தில் சனியும். பத்தில் வியாழனும் நடப்பதால், குடும்பத்தில் பல சிக்கல்கள் தோன்றும். சண்டை சச்சரவுகளுக்கும் குறைவு இருக்காது. பிள்ளைகளால் நிம்மதியின்மை காட்டும். பணவருவாயிலும் பார்க்க செலவு முன்னேறி நிற்கும். தொடங்கும் கருமங்களில் தடை, தாமதங்கள் ஏற்படும். தேகசுகம் பாதிப்படைவதால், மருத்துவச் செலவு அதிகமாகும். விவாகப் பேச்சுக்கள் ஸ்தம்பிதமடையும். உத்தியோகத்தர்களுக்கு பல சிக்கல்களைச் சமாளிக்க வேண்டியிருக்கும். பதவி உயர்வு பின் தள்ளிப் போகும். வியாபாரத்துறை நட்டத்திலேயே நடக்கும். போட்டிகள் அதிகமாகும் மாணவர்களுக்கு முன்னேற்றம் குறையும்.

### மகரம்
*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகரர்ராசியில் பிறந்தவர்களுக்கு குரு பார்வையால் குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கும். கணவன் மனைவி ஒற்றுமை சிறக்கும். புத்திரர்களால் சிறப்பு உண்டு. இனபந்துக்களுடன் ஒற்றுமை வலுக்கும். நண்பர்கள் உதவி புரிவார்கள். பணவருவாய் திருப்தியளிக்கும், வீட்டில் நற்கருமங்கள் நிகழும். திருமணப் பேச்சுக்கள் வெற்றியளிக்கும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு கிட்டும். அதிகாரிகள் பாராட்டுவார்கள். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறக்கும். பழைய முதலீடுகள் விற்பனையாகும். மாணவர்கள் கல்வியில் ஊக்கமுடையவர்களாய் காணப்படுவர்.

### கும்பம்
*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



கும்பராசியினருக்கு குடும்ப நிலை ஓரளவு நன்று. திட்டமிட்ட கருமங்கள் வெற்றியளிக்கும். புத்திரர்களால் செலவு அதிகமாகும். பணவாய் இருந்தாலும், செலவுஸ்தானம் அதிகம். பிரயாணங்களாலும் செலவுகள் ஏற்படும். தேகசுகம் இடையிடையே பாதிக்கக்கூடும். குரு அட்டமத்தில் சஞ்சரிப்பதால், சில அலைச்சல்கள் கூடுதலாகவே இருகக்கும். பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடித்தல் நன்று. விவாகப் பேச்சுக்கள் முடிவின்றி நீண்டுகொண்டு போகும். உத்தியோகத்தர்களுக்கு நன்மைகள் உண்டு. மேலதிகாரிகள் கௌரவிப்பார்கள். வாகனச் செலவும் அதிகமாகும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தமாகவே இருக்கும். எதிர்பார்த்த லாபம் கிடையாது. மாணவர்கள் சிரமத்தின் மேல் முன்னேற்றம் காண்பர். ஊக்கம் தேவை.

### மீனம்
*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீனராசியினருக்கு குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியாக அமையும். குடும்ப அங்கத்தவர்கள் ஒற்றுமையுடன் நடந்து கொள்வர். புத்திரர்களால் மகிழ்ச்சி கிட்டும். குரு பார்வை இருப்பதால், பணவரவு சிறப்பாக அமையும். புதிய திட்டங்களைச் செயற்படுத்த முடியும். தேகசௌக்கியம் பாதிப்படையாது. உத்தியோகத்தர்கள் நினைத்தவாறு பணியாற்றுவர். பலரது பாராட்டுக்களையும் பெறுவார்கள். ஊதிய உணர்வு கிட்டும். திருமணப் பேச்சுக்கள் வெற்றியளிக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்படையும். பழைய முதலீடுகள் விற்பனையாகும். மாணவர்கள் முன்னேற்றமும், ஆசிரியர்களின் பாராட்டுக்களையும் பெறுவர்.

உலக ஊனமுற்றோர் நாள் - டிசம்பர் 03 — சந்துரு

# வலுக்குறைந்தோருக்கு வலுவூட்டி நிற்போம்



இன்று டிசம்பர் 03. சர்வதேச வலுக்குறைந்தோர் நாள். இந்தத் தினத்தை பல தொடர்பு ஊடகங்களிலும், நூல்களிலும் உலக ஊனமுற்றோர் தினம் எனக் குறிப்பிடப்பட்டிருப்பினும். வலுக்குறைந்தோர் நாள் எனக் குறிப்பிடுவதே மிகவும் பொருத்தமானதாக இருக்கும் என்பது மனிதத்துவம் மிக்க பலரதும் கருத்தாகும்.

'வலு' என்பது சக்தியைக் குறித்து நிற்பதாகவும் கூறலாம். மனிதர்களாகிய நாம் உள ரீதியாக மிகப் பெரிய சக்தியைக் கொண்டுள்ளோம். இந்த உளச் சக்தியை பொருத்தமான வகையில் வெளிப்படுத்துவதற்கு, உடல் அவயவங்களை சிறப்பான வகையில் பயன்படுத்தக் கற்று வைத்துள்ளோம். எனினும், துரதிஷ்டவசமாக எம்மில் சிலரிடம் இந்த உளச் சக்தியை வெளிப்படுத்துவதற்கு உதவும் உறுப்புக்கள் சில தமது இயல்பு நிலையில் இருந்து விடுபடும் போதுதான் - விலக்கப்படும் போதுதான் அவர்கள் வலுக்குறைந்தோர் என வரையறுக்கப்படுகின்றனர். இவ்வாறு வரையறுக்கப்படும் என்ற அளவுக்குப் பொருத்தமானது என்பது ஆராயப்பட வேண்டியதே.

வலுக்குறைவு என்பது- விழிப்புலன் வலுக்குறைவு, செவிப்புலன் வலுக்குறைவு, கால், கை போன்ற அவயவ இழப்பு போன்றவாறாக ஏற்பட்டுவிடுகிறது. இவ்வகையான வலுக்குறைவுகள், சிலருக்குப் பிறப்பிலேயே ஏற்பட்டு விடுவதும் உண்டு. எனினும் பலருக்கு நோய், போர் மற்றும் வறுமை, கல்வி அறிவின்மை போன்ற காரணிகளாலும் ஏற்பட்டு விடுகின்றன. இருந்தும் எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை, 1996 இன் பின்னரான காலப்பகுதியில், போர் காரணமாக வலுக்குறைவடைந்தோரது எண்ணிக்கை மிகமிக அதிகம் என்பதே உண்மையாகும்.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விழிப்புலன் வலுவிழந்தவர்களது மேம்பாட்டுக்காக, வாழ்வகம் (சுன்னாகம்), விழிப்புலன் வலுவற்றோர் சங்கம் (யாழ்ப்பாணம்) என்பனவும், வாய்பேச முடியாதவர்களுக்காக செவிப்புலன் வலுவற்றோர் சங்கம் (கலட்டி) மற்றும் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் (திருநெல்வேலி), உளவலுக் குறைந்தவர்களுககாக ஆர்க் (உடுவில்) போன்ற தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. இவற்றுள் விழிப்புலன் வலுவற்றோர் சங்கம், செவிப்புலன் வலுவற்றோர் சங்கம் என்பன முற்றிலும் அந்த அந்த வலுக்குறைந்தவர்களாலேயே நிர்வகிக்கப்பட்டு வருவது பெருமையுடன் குறிப்பிடத்தக்கது.

விழிப்புலன் வலுக்குறைந்தோர் சங்கத்தைப் பொறுத்தவரையில், சுமார் 200 பேர் அங்கத்துவம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இளவயதுடைய அங்கத்துவப் பிள்ளைகளுக்கு கல்விக்கான உதவிகள், தமது அங்கத்தவர்களுக்கான சுயதொழில் முயற்சிகளுக்குரிய பயிற்சி வகுப்புக்கள் மற்றும் பயிற்சியை முடித்துக் கொண்ட தமது அங்கத்தவர்களுக்கான சுயதொழில் முயற்சிக் கடன்கள் என்ற வகையில், தமது அங்கத்தவர்களது மேம்பாட்டுக்காகத் தொழிற்பட்டு வரும் இந்தச் சங்கமானது தொடர்ந்தும், தமது அங்கத்தவர்களது நலன்புரித்திட்டங்களை விரிவுபடுத்தி, முன்னெடுக்க நிதி வசதியற்று, தள்ளாடி நிற்பதாகச் சங்கத்தினது செயலாளர் விசுவலிங்கம் கனகசபை கவலையோடு தெரிவித்தார்.

எங்களிடம் பல்வேறு தொழிற் தகைமைகள் இருக்கின்றன. கதிரை பின்னுதல், தையல் போன்றவற்றில் நாம் நன்கு தேர்ச்சி பெற்றுள்ளோம். எமது அங்கத்தவர்களையே பாடகர்களாகவும், இசையமைப்பாளர்களாகவும் கொண்ட "சாகித்திய இசைக்குழு" என்ற ஒரு இசைக் குழுவையும் நாம் செயற்படுத்தி வருகின்றோம். எமது திறமைக்கும், தகைமைக்கு சந்தர்ப்பத்தைத் தாருங்கள். அது போதும் எமக்கு, நாமே எமது அங்கத்தவர்களது நலனைக் கவனித்துக் கொள்வோம் என ஆதங்கப்படும் விசுவலிங்கம் கனகசபை அடுத்துக் கூறிய வார்த்தை- எமது சமூகத்துக்கு சாட்டையால் அடித்ததைப் போல இருந்தது. "எமது மக்கள் ஆலயங்களை இடித்து, இடித்துக் கட்டிப் பெருப்பித்து விழாவெடுத்து செலவு செய்யும் பணத்தில் எம்மைப் போன்றவர்களது மேம்பாட்டுக்கென - வலுக்குறைந்தவர்களை வலுவூட்டவென ஒரு சிறுதொகையை வீசி எறிந்தாலே போதும், அது எங்களில் பலரது வறுமையைப் போக்கி நிற்கும்' என்ற அவரது அடி மனது உணர்ச்சிக் கொந்தளிப்புக்கள் அனைத்தையும் திரட்டி, வார்த்தைகளாக கொட்டும் போது, தலையைக் குனிந்து கொள்வதைத் தவிர வேறு ஒரு பதிலையும் கூற வகையற்றே இருக்க முடிந்தது. இந்தச் சங்க அங்கத்தவர் ஒருவர் இருந்த இடத்தில் இருந்து, அரை மைல் தூரத்துக்கப்பால் வெடித்த நிலக்கண்ணி வெடியினது அதிர்வால், தனது இரு கண்களின் பார்வையையும் இழந்து போய் விட்டார் என்றால், அதற்கு யார் பொறுப்பேற்பது? அவரது வாழ்வு அத்தோடு அஸ்தமிப்பதா? தென் பகுதியிலுள்ள விழிப்புலனற்றோர் நலன்புரிச் சங்கங்களது கண்ணாடிப் பெட்டியினுள் காசு சேர்த்து அனுப்பி உதவும் சில வணிக வங்கிகளிடம் எமது நிலையைக் கூறி, எமது சங்கத்துக்கும் நிதி உதவி தேவைப்படுகின்றது. ஒரு உண்டியலைக் கொண்டுவந்த வைக்க அனுமதிப்பீர்களா? எனக் கேட்ட போது, தலைமை அலுவலகத்தைக் கேட்காது நாம் ஒன்றும் செய்ய முடியாது எனத் தட்டிக் கழித்துவிடும் நம்மவர்களது கடமையுணர்ச்சிகளின் முன் நாம் காணாமல் போய்விட்டோம் என, கண்ணீர் கசியக் கூறும் கனகசபை போன்றவர்களுக்கு கைகொடுத்துதவுவது எமது தார்மீகக் கடமை தான் என்பதை எப்பொழுது நாம் உணர்ந்து கொள்வது? (தொடரும்)

## காஸாவின் எல்லைப் பகுதியில்

# எகிப்து படைகளை நிறுத்த இஸ்ரேல் இணக்கம் தெரிவிப்பு



காஸாப் பிரதேசத்தின் எல்லைப் பகுதியில் 750 எகிப்தியப் படையினரை காவற்பணிகளில் நிறுத்துவதற்கு இஸ்ரேலிய அதிகாரிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சர் செளல் மொபாஷிற்கும், எகிப்திய புலனாய்வுத்துறை அதிகாரி ஓமர் சுலைமானுக்கும் இடையில் ஜெருசலேமில் இடம்பெற்ற உயர்மட்டச் சந்திப்பு ஒன்றின்போதே இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

காஸாப் பிரதேசத்தில் இருந்து யூதக் குடியிருப்பாளர்களும் இஸ்ரேலியப் படையினரும் பின்வாங்கப்படுவதற்கு முன்னர் பெரும்பாலும் எதிர்வரும் ஜனவரி மாதமளவில் எகிப்தியப் படைகள் காஸாவின் எல்லைப பகுதிகளில் நிறுத்தப்படவுள்ளன. மேலும், இஸ்ரேலுக்கும் எகிப்திற்குமான நுழைவாயிற் பகுதியில் எகிப்தியப் பொலிஸார் சோதனை நடவடிக்கைகளுக்காக நிறுத்தப்படவுள்ளனர்.

காஸாப் பகுதியிலிருந்து இஸ்ரேலியப் படைகள் பின்வாங்கப்பட்டதன் பின்னர் ஹமாஸ் போன்ற தீவிரவாத அமைப்புக்கள் நடமாடுவதைத் தாம் விரும்பவில்லையென இஸ்ரேலும், எகிப்தும் தெரிவித்துள்ளன.

இதேசமயம் பலஸ்தீனப் பொலிஸாருக்கு பயிற்சிகளை வழங்குவதற்கு எகிப்து இணக்கம் தெரிவித்துள்ளது.

எகிப்தியப் பிரதமர் முபாரக்கிற்கும் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தற்போதை தலைவர் முகமட் அபாஸிற்கும் இடையே இடம்பெற்ற இராஜதந்திரக் கலந்துரையாடல் ஒன்றினையடுத்தே இந்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்த நிலையில் எகிப்திற்கும் பலஸ்தீனத்திற்கும் இடையிலான இந்த நடவடிக்கைகளில் தலையிடுவதில் ஆர்வம் காட்டிவரும் இஸ்ரேல் இதன்மூலம் பலஸ்தீனத்துடன் நிலவிவரும் முரண்பாடுகளைப் பேச்சுக்கள் மூலம் தீர்க்கலாமென எண்ணியுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

பலஸ்தீன முன்னாள் ஜனாதிபதி மரணமடைந்ததன் பின்னர் பல ஆண்டுகாலமாக இஸ்ரேலிற்கும் பலஸ்தீனத்திற்கும் இடையே நிலவிவரும் முரண்பாடுகளைப் பேச்சுக்களின் மூலம் தீர்த்துக்கொள்ள முடியுமென பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தற்போதைய தலைவர் முகமட் அபாஸும் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோனும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கோலான் குன்று தொடர்பாக இஸ்ரேலிற்கும் சிரியாவிற்கும் இடையே நிலவிவரும் முரண்பாடுகளை பேச்சுக்கள் மூலம் தீர்த்துக்கொள்வதற்கு சிரியா தயாராக உள்ளதாக எகிப்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அகமட் அப்துல்கீத் தெரிவித்தார்.

ஆனால், சிரியா - பலஸ்தீனத் தீவிரவாதிகளுக்கு ஆதரவு வழங்குவதை நிறுத்தும்வரை சிரியாவுடன் பேச்சுக்களை நடத்தப்போவதில்லையென இஸ்ரேல் தெரிவித்துள்ளது. கோலன் குன்றுப் பிரதேச பிரச்சினைகள் தொடர்பாக சிரியாவும் இஸ்ரேலும் 2000 ஆம் ஆண்டு நடாத்திய பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## நேட்டோ படைகள் மேற்கொண்டுவந்த

# பொஷ்னிய அமைதி காப்பு பணியை ஐரோப்பிய யூனியன் பொறுப்பேற்றது



பொஷ்னியாவில் அமைதிகாக்கும் பணியை நேட்டோ அமைதி காக்கும் படைகளிடம் இருந்து ஐரோப்பிய யூனியனின் அமைதி காக்கும் படைகள் பொறுப்பேற்றுள்ளன.

கடந்த ஒன்பது ஆண்டுகளாக பொஷ்னியாவில் நிலவிவந்த இனவாத யுத்தத்திற்குப் பின்னர் தற்பொழுது அங்கு அமைதிகாக்கும் பணியில் நேட்டோப் படைகளே ஈடுபட்டு வந்தன். பொஸ்னியாவில் தளம் ஒன்றை அமைத்த நேட்டோ படைகள் பொஸ்னிய இராணுவ கட்டமைப்புச் சீர்திருத்தத்தினை மேற்கொண்டுவந்ததுடன், பொஷ்னியப் போரின்போது படுகொலைகளைப் புரிந்த குற்றவாளிகள் தொடர்பாக விசாரணைகளையும் மேற்கொண்டு வந்தன.

இப்பொழுது இப்பணிகள் மேற்கொள்வதற்கு ஐரோப்பிய யூனியனின் அமைதிகாக்கும் படையினர் 7000 பேர் பொஷ்னியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

அமைதிகாக்கும் பணியினை நேட்டோ படைகளிடம் இருந்து ஐரோப்பிய யூனியன் அமைதிகாக்கும் படைகளிடம் கையளிக்கும் வைபவம் சறஜிவோவில் உள்ள புட்மிர் தளத்தில் இடம்பெற்றது.

இந்த வைபவத்தின்போது நேட்டோ படைகளின் கொடி இறக்கப்பட்டு, ஐரோப்பிய ஜூனியன் அமைதிகாக்கும் படைகளின் கொடி ஏற்றப்பட்டது.






ஈராக்கின் மொசூல் நகரில் மூன்று ஈராக்கிய துருப்புக்கள் உட்பட ஒன்பது ஈராக்கியர்களின் சடலங்களை அமெரிக்கப் படையினர் நேற்று கண்டுபிடித்தபோது எடுக்கப்பட்ட படம்.

## ஜனவரி தேர்தல் பாதுகாப்புக்காக

# அமெரிக்கப் படைகளின் தொகை ஈராக்கில் அதிகரிக்கப்படுகின்றது



ஈராக்கில் அடுத்த மாதம் இடம் பெறவுள்ள தேர்தலை முன்னிட்டு அங்கு பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக அமெரிக்கா தனது படைகளை அதிகரிக்கவுள்ளது. அத் துடன் ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படைகளின் சில பிரிவுகளது சேவைகளும் அடுதத வருடம் மார்ச் மாதம்வரை நீடிகப்பட்டுள்ளது.

ஈராக்கில் தற்போது ஒரு லட்சத்து 38 ஆயிரம் அமெரிக்கப் படையினர் உள்ளனர். இந்தத் தொகை இனிவரும் காலத்தில் ஒரு லட்சத்து 50 ஆயிரமாக உயர்த்தப்படவுள்ளது. இந்தப் படைகளின் அதிகரிப்பானது ஈராக்கில் மார்ச் மாதம்வரை பாதுகாப்பை அதிகரிப்பதற்கே என பிரிகேடியர் ஜெனரல் டேவிட் றொட்றிக்கோ தெரிவித்தார்.

அத்துடன், இதில் முக்கியமானது நடைபெறவுள்ள தேர்தலுக்கான பாதுகாப்பை வழங்குவது. மற்றையது பலூஜா நகர் மீதான இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர் கிளர்ச்சிவாதிகளிடமிருந்து வரும் நெருக்கடியைத் தடுப்பதற்கு எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஈராக்கில் நிலைகொண்டுள்ள சில அமெரிக்கப் படைப்பிரிவுகள் தமது சேவைக் காலத்தை 12 மாதத்திலிருந்து 14 மாதத்திற்கும் அல்லது ஏழிலிருந்து ஒன்பது மாதத்துக்கு நீடித்துள்ளன.

அத்துடன் 2 ஆவது பிரிகேட்டான முதலாவது கவால்றி பிரிவு இரண்டாவது தடவையாகவும் தனது சேவைக்காலத்தை நீடித்துள்ளது. இந்தப் படைப்பிரிவு முதலில் சென்ற மாதமும், பின்னர் ஜனவரி மாதமும் தமது சேவையை முடித்து வெளியேறுவதாக இருந்தபோதிலும், அதனது சேவைக்காலம் தற்போது மார்ச் மாதம்வரை நீடிக்கப்பட்டுள்ளது.



ஆனால், ஈராக்கில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள தேர்தல் பிற்போடப்படுமாக இருந்தால் இந்தப் படைப்பிரிவு தனது சேவையை நீடிக்கமாட்டாதென ஜெனரல் றொட்றிக்கோ தெரிவித்தார்.

அடுத்தமாதம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள ஈராக்கிய தேர்தல் கண்டிப்பாக நடத்தப்பட்டே தீர வேண்டுமென ஈராக்கிய ஜனாதிபதி காசியாவிர் வற்புறுத்தியுள்ளார்.

இதனிடையே அமெரிக்கப் படையினருக்கு உதவியவேளை தம்மால் கடத்தப்பட்ட மூன்று ஈராக்கியர்களையும் கொன்றுவிட்டதாக அல் - இஸ்லாம் என்ற அமைப்பு இணையத்தளம் மூலம் அறிவித்துள்ளது.



ஈராக்கின் மத்திய பாக்தாத் நகரில் நேற்று இடம்பெற்ற மோட்டார் தாக்குதலில் பொலிஸ் வாகனம் ஒன்று தீப்பற்றி எரியும்போது, ஈராக்கிய பொலிஸார் ஒருவர் அபாயக்குரல் எழுப்புகிறார். இந்தத் தாக்குதலில் 1 ஈராக்கிய பொலிஸார் கொல்லப்பட்டதுடன், 11 பொலிஸார் காயமுற்றனர்.

# நேபாள தலைநகரில் 2 குண்டுவெடிப்புகள்!



நேபாள தலைநகர் காத்மண்டுவில் இடம்பெற்ற இரண்டு குண்டுவெடிப்புக்களில் கட்டடங்களுக்குச் சேதமேற்பட்டுள்ளபோதும், எவருக்கும் எவ்வித உயிராபத்தோ, காயமோ ஏற்படவில்லையென நேபாளப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் குண்டுவெடிப்புக்கள் நேபாளத்தின் தேர்தல் ஆணையகக் கட்டத்தின் மீதும், முன்னாள் பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலாவின் மகளது வீட்டின் மீதும் நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்ட மாதிரியைப் பார்க்குமிடத்து இதனை மாவோயிஸ்ட் கிளர்ச்சிவாதிகளே நடத்தியிருக்கவேண்டுமென பொலிஸார் தெரிவித்தனர்.

முதலாவது குண்டுவெடிப்பு முன்னாள் பிரதமரின் மகளது வீட்டில் இடம்பெற்றது. இரண்டாவது குண்டுவெடிப்பு தலைநகர் காத்மண்டுவிலுள்ள தேர்தல் ஆணையகத்தின் மூன்றுமாடிக் கட்டடத் தொகுதி மீது நடத்தப்பட்டது.

தேர்தல் ஆணையகக் கட்டடத்தின் மேல் மாடியில் உறங்கிக் கொண்டிருந்தவேளை திடீரென வெடிச்சத்தம் கேட்டதாகவும், அந்த வேளை உடைந்த கண்ணாடித் துண்டுகள் தன்மீது விழுந்ததாகவும் தேர்தல் ஆணையக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஆனால், இந்த இரு குண்டுவெடிப்புகளும் ஒரே நேரத்திலேயே நடத்தப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை அடுத்தமாதம் 13 ஆம் திகதிக்கு முன்னர் கிளர்ச்சிவாதிகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள வேண்டுமென நேபாள அரசாங்கம் விதித்த காலக்கெடுவை கிளர்ச்சிவாதிகள் நிராகரித்த பின்னர் இந்தக் குண்டுவெடிப்புகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பிலிப்பைன்ஸில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தில் வீடுகள் நீரில் மூழ்கியிருக்கும் காட்சி.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சமாதான முயற்சிகள் வெற்றிபெற
# அரசியல் இராணுவ கட்டமைப்புக்களின் உளப்பாங்கில் மாற்றங்கள் வேண்டும்!
## அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்



இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பது மற்றும் சமாதான முயற்சிகள் வெற்றிபெறுவதற்கு இலங்கை அரசாங்கத்தின் அரசியல், இராணுவ கட்டமைப்புக்களின் உளப்பாங்கில் மாற்றம் ஏற்படவேண்டியது அவசியமாகுமென விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

சிறிலங்கா பெர்ஸ்ட் என்ற அமைப்பினரை நேற்றுமுன்தினம் கிளிநொச்சியிலுள்ள புலிகளின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்திச் செயலகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல் ஸ்திரத்தன்மையும் அமைதியும் பொருளாதார முன்னேற்றத்துக்கு பின்னிப்பிணைந்த பிரதான தேவைகளாகும். போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு புனர்வாழ்வு புனரமைப்பு புனர்நிர்மாண நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என்பது புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஆரம்பத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரையில் தெரிவிக்கப்பட்டுள்ள செய்தியை அரசு தெளிவாகப் புரிந்துகொண்டால் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் உள்ள முட்டுக்கட்டைகள் விலகும். இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவு தொடர்பில் பேசி அது அமுல்படுத்தப்படும். பின்னர் இறுதித்தீர்வு குறித்துப் பேசலாம்.

சிறிலங்காவின் அரசியல் இராணுவக் கட்டமைப்புக்கள் தமிழர் விவகாரத்தில் எவ்வாறு எதிர்மறை உளப்பாங்குடன் நடந்துகொள்கின்றன என்பதற்கு சில உதாரணங்களைச் சுட்டிக்காட்டிய தமிழ்ச்செல்வன் அவை அமைதி முயற்சிகளுக்கான புறச் சூழலுக்குப் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் எடுத்துக்கூறினார்.

### திறப்பு விழா ஒத்திவைப்பு

கிளிநொச்சி மடுகந்த - யாழ்ப்பாணம் இணைப்பு ரெலிக்கொம் கோபுரங்கள் திறப்பு விழா ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக ரெலிகொம் பிராந்திய முகாமையாளர் சரவணபவன் அறிவித்துள்ளார். இன்று நடைபெறவிருந்த இந்தத் திறப்பு விழாவில் இலங்கை ரெலிக்கொம் தலைவர் கலந்து கொள்ளவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 92 ஈழத் தமிழ் அகதிகள் விமானம் மூலம் திரும்பினர்!

இந்தியாவிலிருந்து ஈழத் தமிழ் அகதிகளை விமானம் மூலம் அழைத்து வரும் பணியை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் (யூ.என்.எச்.சி.ஆர்.) ஆரம்பித்துள்ளது.

இதனையடுத்து சுய விருப்பத்தின் பேரில் நாடு திரும்ப முன்வந்த 92 ஈழத் தமிழ் அகதிகள் நேற்று முன்தினமும், நேற்றும் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவ்வாறு வந்த அகதிகள் சொந்த இடங்களுக்கும் உறவினர்களின் வீடுகளுக்கும் அவர்களின் விருப்பத்தின் பேரில் அனுப்பிவைக்கப்பட்டனர்.

ஈழத் தமிழ் அகதிகள் கடல் வழியாக சட்ட விரோதமாக நாடு திரும்புவதையடுத்து இலங்கை அரசாங்கம் யு.என்.எச்.சி.ஆர். உதவியுடன் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

# அரசியல் சூனிய...

கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் செய்த நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரை சமாதானச் செயலகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தியபோது புலிகளின் இந்த நிலைப்பாடு குறித்து விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச செல்வன் வலியுறுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் தமிழீழ காவற்துறைப் பொறுப்பாளர் நடேசன், புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் மற்றும் ஜோர்ஜ் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்தச் சந்திப்பின்போது மாவீரர் தினத்தன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஆற்றிய உரையின் உள்ளடக்கம் குறித்து நோர்வேத் தூதுவர் பிரட்ஸ்கருக்கு தமிழ்ச்செல்வன் விரிவாக எடுத்துக் கூறினார்.

அத்துடன் போரும் இல்லாத சமாதானமும் இல்லாத அரசியல் சூனியநிலை நீடிப்பது குறித்துத் தெளிவுபடுத்திய தமிழ்ச்செல்வன் இந்தநிலை தொடராமல் களையப்படவேண்டியது அவசியமாகும் என்று வலியுறுத்தித் தெரிவித்தார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையை புலிகள் தரப்பு உறுதியாகவும் கண்ணியமாகவும் நடைமுறைப்படுத்தி வருகின்றனர். தொடர்ந்தும் இந்த நிலை பேணப்படும் என்று உறுதியளித்த தமிழ்ச்செல்வன் -

இடைக்கால தன்னாட்சி அதிகார வரைபின் அடிப்படையில் பேச்சு நடத்துவதற்கு தலைவர் பிரபாகரன் விடுத்த அழைப்பு தொடர்பான அரசாங்கத்தின் பதிலை தாம் எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்தவாரம் பல்வேறு இடங்களிலும் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள், புரிந்துணர்வு உடன்பாட்டையும் அமைதி முயற்சிகளையும் ஆபத்தில் தள்ளக்கூடியதென்று நோர்வேத் தூதுவர் தெரிவித்த கருத்துக்குப் பதிலளித்த தமிழ்ச்செல்வன் -

சமாதான முயற்சிகளைக் குழப்ப எத்தனிக்கும் சக்திகளே திருகோணமலையிலும் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களிலும் தமிழ் மக்களுக்கு ஆத்திரமூட்டும் வன்முறைச் சம்பவங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இத்தகைய சம்பவங்களை அரசாங்கமே கட்டுப்படுத்தவேண்டும். இந்தச் சம்பவங்களே மக்கள் கலவரங்களைத் தூண்டவல்ல பதற்றநிலையைத் தோற்றுவிக்கின்றன என்று தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் கருத்துத் தெரிவிக்கையில் - அரசாங்கத்திடம் இருந்து எந்தவொரு புதிய செய்தியையும் புலிகளுக்குக் கொண்டுசெல்லவில்லை. இது ஒரு வழக்கமான சந்திப்பு மட்டுமே என்று குறிப்பிட்டார்.

### தவறிய பயணப்பொதி மன்னார் பொலிஸில்

தமிழ்நாட்டில் அகதியாக இருந்து கடந்த சனிக்கிழமை படகு மூலம் தலைமன்னார் வந்த முஸ்லிம் வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த ஹென்றிக் கிளமென்ற் நாகபூசணி (வயது 23) என்பவர் தனது பயணப் பொதியை தவறவிட்ட நிலையில் மன்னாரிலிருந்து தனது சொந்த இடமான யாழ்ப்பாணத்திற்கு மீளக்குடியமரும் வகையில் திரும்பியுள்ளார்.

தற்போது இவரது தவறவிடப்பட்ட பயணப் பொதி தலை மன்னார் பொலிஸ் நிலையத்தில் உள்ளதாகவும், எனவே குறித்த நபர் மன்னார் நகர கிராம சேவை அலுவலரூடாக தொடர்பு கொண்டு தவறவிடப்பட்ட பயணப் பொதியைப் பெற்றுக்கொள்ளலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (201)

# பாதாள உலகக்...

பொட்டு நௌபரை கைதுசெய்துள்ளனர். இவரைக் கைதுசெய்தபோது இவரது நாட்குறிப்பும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இந்த நாட்குறிப்பேட்டில் பாதாள உலகக் குழுவுடன் தொடர்புடைய 19 உயர் பொலிஸ் அதிகாரிகளின் பெயர் விபரங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

இவர்களில் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களான போதி லியனகே, பிரேமலால் ரணகல, கொழும்புப் பகுதிக்கான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி அமர்ஜித் சில்வா, முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா, கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித ஸ்ரீமான ஆகியோரும் இந்தப் 19 பொலிஸ் அதிகாரிகளில் அடங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

## சோதனைச்....

காரிகள் கடமைக்கு வரவில்லை.

இதனால் ஓமந்தை மற்றும் உயிலங்குளம் சோதனைச் சாவடிகளை மூடுவதென படையினரும் பொலிஸாரும் முடிவு செய்தனரென அவர் மேலும் தெரிவித்தார்.

## நாடாளுமன்ற...

ஜனாதிபதி சந்திரிகா நாடாளுமன்ற விவாதத்தை அவதானித்தார். கல்வி, உயர்கல்வி அமைச்சு ஜனாதிபதி சந்திரிகாவின்கீழ் இருப்பது குறிப்பிடத்தக்கது.

நீண்ட காலத்துக்குப் பின்னர் ஜனாதிபதி சந்திரிகா நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா மன்னார்...

குழப்புவதற்கு பௌத்த சிங்கள பேரினவாத சக்திகள் மேற்கொண்ட முயற்சிகளை கண்டித்தும்,

மன்னார், வவுனியா மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் மாவீரர் நாள் நிகழ்வுகளைக் குழப்புவதற்கு இராணுவம் மேற் கொண்ட சதி நடவடிக்கைகள் மற்றும் பொது மக்கள் மீது மேற்கொண்ட இனவாத வன்முறைகளைக் கண்டித்தும் இந்த ஹர்த்தால் நடத்தப்பட்டது.

இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பை வவுனியாவில் மாணவர் ஒன்றியம், தமிழ் எழுச்சிப் பேரவை, வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் ஆகியன விடுத்திருந்தன. மன்னாரில் தொழிற் சங்கங்களின் கூட்டுச் சம்மேளனம் மற்றும் வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் ஆகியனவும் கூட்டாக விடுத்திருந்தன.

இந்த ஹர்த்தால் காரண மாக பாடசாலைகள் இயங்கவில்லை. ஊழியர் வரவின்மையினால் அரசாங்க, தனியார் அலுவலகங்கள் அனைத்தும் செயலிழந்தன.

வியாபார நிலையங்கள், சந்தைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. போக்குவரத்து சேவைகளும் பாதிக்கப்பட்டன. இதன் காரணமாக வீதிகளிலும், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும் வழமையை விட கூடுதலான இராணுவத்தினரும் பொலிஸாரும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டனர்.

வீதிகளில் போக்குவரத்தை தடை செய்யும் வகையில் பரவலாக ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டன. சில இடங்களில் மரக்குற்றிகள் வீதிகளின் குறுக்கே போடப்பட்டிருந்தன.

ஓமந்தை மற்றும் உயிலங்குளம் முன்னணிக் காவல் நிலையப் பிரதேசங்களில் இராணுவ சோதனைச் சாவடிகள் மூடப்பட்டிருந்தமையினால் வன்னிக்கும் - வவுனியா மற்றும் மன்னாருக்கும் இடையிலான போக்குவரத்துகள் முற்றாகத் தடைப்பட்டிருந்தன.

ஓமந்தை சோதனைச் சாவடியூடாக நேற்றையதினம் செல்லவென வந்த பயணிகளும், பாரவூர்திகளும் வவுனியாவில் தரித்து நின்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, வவுனியா புகையிரதநிலைய வீதியிலுள்ள பண்டாரிக்குளம் சந்தியில் அமைந்திருந்த பொலிஸ் காவலரண் நேற்றுமுன் தினம் இரவு இனந்தெரியாதவர்களால் தீக்கிரையாக்கப்பட்டது.

இந்தத் தீ வைப்புச் சம்பவத்திற்கு விடுதலைப் புலிகளே பொறுப்பென பொலிஸார் தெரிவித்த போதிலும், இதற்கும், தமக்கும் எவ்வித தொடர்புமில்லையென வவுனியா மாவட்ட அரசியற்துறையினர் மறுத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறையிட்டுள்ளதாக வவுனியா பொலிஸ் அத்தியட்சகர் நெவில் குருகே தெரிவித்தார்.

(03,201)

# திருமலை நகரிலிருந்து...

மாவட்ட துணைத்தளபதி வசந்தன், குச்சவெளி கோட்ட இராணுவப் பொறுப்பாளர் குணம், நகர அரசியற்துறைப் பொறுப்பாளர் சிவகுமார் ஆகியோரும்,

படைத்தரப்பில் திருமலை மாவட்ட 22 ஆவது டிவிசனின் தளபதி மேஜர் ஜெனரல் சாலிய குலதுங்க, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஹேவகே ஆகியோரும்,

கண்காணிப்புக்குழு சார்பில் ஜான் ஸ்லோன், டக்பின், ஹெட்ஜ் லைபேர்க் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில்- அண்மையில் திருமலையில் வன்முறைகள் இடம்பெற ஜே.வி.பியே காரணமாகும். கடந்த 26 ஆம் திகதி ஜே.வி.பி மேற்கொண்ட ஊர்வலத்திலும் அதனை பொலிஸார் நகர் வரை அனுமதித்ததாலுமே வன்முறைகள் வெடிக்க காரணமாகும். எனவே விடுதலைப் புலிகள் மற்றும் தமிழ் மக்கள் தரப்பில் எவ்வகையான ஆத்திரமூட்டும் சம்பவங்களும் இடம்பெறவில்லை. இதற்கும் தமிழர் தரப்பிற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை.

அத்துடன் மாவீரர் தினத்தன்று தேசியக் கொடியேற்றம் தொடர்பாக எழுந்த பிரச்சினையில் படையினர் கவச வாகனங்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும் வந்து தமிழ் மக்கள் மீது தாக்குதல்களை நடத்தியதும் இந்த வன்முறைகளுக்குக் காரணமாகும்.

எனவே இந்த இரண்டு பிரிவுகளும் புதிதாக நிறுத்தப்பட்ட இடங்களிலிருந்து பின்வாங்கப்படவேண்டும்.

கடந்த நவம்பர் மாதம் இராணுவத்தில் கொல்லப்பட்டவர்களைக் கார்த்திகை வீரர்கள் தினமென ஜே.வி.பி அனுஷ்டித்தபோது, விடுதலைப் புலிகள் தமது மாவீரர்களை நினைவுகூர அதனை ஜே.வி.பி எதிர்த்தது வியப்பிற்குரியதும், நகைப்புக்கிடமானதுமாகும் என எழிலன் படைத்தரப்புக்கு தெரிவித்தார். ,

இதற்குப் பதிலளித்த மேஜர் ஜெனரல் சாலிய குலதுங்க, இனி வரும் காலங்களில் கவசப் படைப் பிரிவையும், மோட்டார் சைக்கிள் பிரிவையும் திருமலை நகரத்துக்கு அனுப்புவதில்லை எனவும், இராணுவக் காவல் தேவைப்படும் பகுதிக்கு அது வழங்கப்படுமெனவும், தற்போது நகரப் பகுதியிலுள்ள மோட்டார் சைக்கிள் படைப்பிரிவை உடனடியாகப் பின்வாங்குவதாகத் தெரிவித்த அவர், சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் மட்டும் படையினரின் பாதுகாப்பு இருக்குமெனவும் தெரிவித்தார்.

அத்துடன் எதிர்காலத்தில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறாமல் தடுத்து சமாதானத்தை ஏற்படுத்த தமிழ்ப்பகுதிகளில் விடுதலைப் புலிகளும், சிங்களப் பகுதிகளில் படையினரும் மக்களிடம் கருத்துக்களை எடுத்து விளக்குவதென இணக்கம் காணப்பட்டது.

இந்தச் சந்திப்பின் இறுதியில் கண்காணிப்புக் குழுவினர் பொலிஸாரிடம் வேண்டுகோளொன்றை விடுத்தனர். அதாவது இந்த வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறக் காரணம் - ஊர்வலங்களும், ஹர்த்தாலும்தான்.

எனவே இவற்றை எதிர்காலத்தில் நடத்த விடாமல் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேட்டுக்கொண்டனர்.

இதற்குப் பதிலளித்த பொலிஸ் அதிகாரி - ஹர்த்தாலை நாம் தடை செய்ய முடியாது. ஏனெனில் அதனை ஒவ்வொரு பிரிவினரும் சேர்ந்து செய்கின்றனர். ஆனால் எமது அனுமதி பெற்று செய்யும் ஊர்வலங்கள் போன்றவற்றை தடைசெய்யலாம் எனத் தெரிவித்தார். அத்துடன் நேற்றிலிருந்து திருமலையில் ஊர்வலங்கள் நடத்த தடைவிதிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

(04,10)

# மரண அறிவித்தல்



## மார்க்கண்டு பாலசுந்தரம்

கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு பாலசுந்தரம் 30.11.2004 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.12.04ம்) திகதி வியாழக் கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய் (இ)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.